Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 259 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 27. திங்கள் 12.08.2013

## சொந்தக் காணிகளுக்குச் சென்ற தமிழ் விவசாயிகள் விரட்டியடிப்பு

### கொக்குத்தொடுவாயில் மகாவலி அதிகாரிகள் அராஜகம்

முல்லைத்தீவு, ஒக. 12

30 வருடங்களுக்குப் பின் தமது சொந்த நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சென்ற கொக்குத்தொடுவாய் மக்கள் மகாவலி திட்ட அதிகாரிகளால் நேற்று விரட்டியடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

போர் காரணமாக 1984 ஆம் ஆண்டு கொக்குத்தொடுவாய் மத்தியைச் சேர்ந்த மக்கள் அரசினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தனர். எனினும் நாட்டில் சுமுகநிலை ஏற்பட்டதனை அடுத்து 2011 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இருப்பினும் மீளக்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் மக்களுக்குரிய விவசாய நிலங்கள் திருப்பி வழங்கப்படவில்லை. இது தொடர்பாக வெலிஓயாப் பகுதி பிரதேச செயலருடன் மக்கள் தொடர்பு கொண்ட போது அந்தப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் மணலாறு சுகந்தாமுறிப்பு, எரிஞ்சகாடு ஆகிய பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு உரிமையுடைய விவசாயிகள் நேற்றையதினம் சென்று உழவு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், குறித்த இடங்களில்

தொடர்ச்சி: பக்கம் 21

## நாவற்குழி விகாரையில் வெடிக்காத கைக்குண்டு

### நேற்று மீட்டனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக. 12

நாவற்குழியில் நேற்று முன்தினம் இரவு கைக்குண்டு வெடித்த இடத்திலிருந்து நேற்றுக் காலை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்றைத் தாம் மீட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பதில் நீதிவான் கணபதிப்பிள்ளை முன்னிலையில் மீட்கப்பட்ட கைக்குண்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதனைச் செயலிழக்க வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நாவற்குழியில் 300 வீட்டுத் திட்டத்தில் உள்ள விகாரை மீதே நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கைக்குண்டு ஒன்று வெடித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதன் போது

தொடர்ச்சி: பக்கம் 21

ஒபாமாவை போன்று செயற்பட வேண்டும் 06
தீவிரமாகும் சிரிய இராணுவத் தாக்குதல் 07
ஆலடி சிந்து சம்பியன் 22
சிறந்த மனிதனாக உருவாக்கியது கிரிக்கெட் 23

# சிங்களவரிடம் கூட்டமைப்பே மன்னிப்புக்கோர வேண்டும்

### எக்காளமிடுகிறார் எல்லாவல மேதானந்த தேரர்

கொழும்பு, ஒக. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலிகளும் சிங்கள மக்களிடம் மண்டியிட்டு மன்னிப்புகோரவேண்டும் என்று தெரிவித்துள்ளார் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர்.

வெலிவேரிய தாக்குதல் சம்பவத்துக்கு மன்னிப்பு கோரும் அரசு முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு மன்னிப்புகோரவில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

''புலிகளிடமிருந்து மக்களை மீட்பதற்காகவே வன்னியில் இராணுவம் மனிதாபிமான போரை முன்னெடுத்தது. எனவே, முள்ளிவாய்க்கால் போருக்கும் வெலிவேரியா தாக்குதல் சம்பவத்துக்குமிடையில் நிறைய



வித்தியாசங்கள் இருக்கின்றன.

இதைக்கூடப் புரிந்துகொள்ளமுடியாத நிலையிலேயே கூட்டமைப்பு இருக்கின்றது. குறிப்பாக பிக்குகள் படுகொலை, தலதாமாளிகை மீதான தாக்குதல் ஆகியன தொடர்பில் புலிகளும் கூட்டமைப்பினருமே சிங்கள மக்களிடம் மன்னிப்புகோர வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அரசியல் தீர்வை கேட்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்த அபிவிருத்திகளை அரசு செய்து கொடுத்துள்ளது. எனவே, தேர்தலில் தமிழ் மக்கள் இம்முறை அரசையே ஆதரிப்பார்கள். மாறாக தமிழர்கள் வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பை ஆதரிப்பார்களாயின் அது தனது கழுத்தை தானே அறுத்துக் கொள்ளும் செயலுக்கு ஒப்பானதாகும் - என்றார். (ங-சி)

## நல்லூரானுக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம், ஓக.12

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்த சுவாமி கோவில் வருடாந்தப் பெருவிழா இன்று பகல் பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதிகாலை 4.30 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆரம்பமாகும் திருவிழாவில் அதைத் தொடர்ந்து இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக கொடித் தம்பத்திற்கு எழுந்தருளுவார். பகல் 10 மணிக்கு கொடியேற்று வைபவம் இடம்பெற்று முருகப் பெருமானின் உள்வீதியுலா இடம்பெறும். (ங-7)

## முஸ்லிம்கள் மீதான தாக்குதலை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்

### ஒரே குரலில் கோரினர் முஸ்லிம் அமைச்சர்கள்

கொழும்பு, ஓக. 12

கொழும்பு, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் அரசியல் வாதிகள் ஓரணியில் திரண்டு தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம்களுக்கு எதிரான மத ரீதியான வெறுப்பூட்டும் நடவடிக்கைகள் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்படுவதைத் தடுத்து நிறுத்த காத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒருமித்த குரலில் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து முஸ்லிம்

தொடர்ச்சி: பக்கம் 21

## கிராண்ட்பாஸில் பதற்றநிலை நேற்றும் ஊரடங்குச்சட்டம்

கொழும்பு, ஓக. 12

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் இரண்டாவது நாளாக நேற்றும் பதற்ற நிலை நீடித்தது. குறித்த பகுதியில் அமைந்திருந்த பள்ளிவாசல் ஒன்றின் மீது நூற்றுக்கும் மேற்பட்டோர் தாக்குதல் நடத்தி இருந்தனர். இதனால் அப்பகுதியில் சிங்கள - முஸ்லிம் தரப்புகளுக்கு இடையே பெரும் முறுகல் நிலை மூண்டது. இதனையடுத்து அந்தப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தோடு தாக்குதலுக்கு உள்ளான பள்ளிவாசலை சுற்றி பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றும் குறித்த பகுதியில் இரு தரப்புக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் சுமார் 7 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனையடுத்து மீண்டும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் நேற்று மாலை 6 மணி தொடக்கம் இன்று காலை 7 மணிவரை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது .

'அமைதியை பேணுவதற்காக கிராண்ட்பாஸ் மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கிராண்ட்பாஸ் பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பிலான விசாரணை கொழும்பு குற்றத் தடுப்புப்

தொடர்ச்சி: பக்கம் 21



# இலங்கையில் தொழிலாளர் புரட்சி அச்சத்தில் தொடர்ந்தும் அரசு

யாழ்ப்பாணம், ஓக. 12
தொழிலாளர் வர்க்கத்தினர் ஒன்றிணைந்து தனக்கெதிராக புரட்சியில் இறங்கி விடுவார்களோ என்று இந்த அரசு பீதியடைந்துள்ளது.
அதனாலேயே வெலிவேரிய போன்று மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கும் போது அதனை அரசு தொடர்ந்து இரும்புக்கரம் கொண்டு அடக்கி வருகிறது - என்று சோசலிச சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வெலிவேரியாவில் தண்ணீர் கேட்டு நடந்த போராட்டத்தை அரசு துப்பாக்கி கொண்டு அடக்கியது. அதனாலேயே மூன்று உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.
தமிழ் மக்களைப் படுகொலை செய்த அரசு தற்போது சிங்கள மக்களையும் படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ளது.
ராஜபக்ஷ அரசு பொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது. தேர்தலின் பின்னர் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு விலைகள் அதிகரிக்கும்.
தேர்தலில் எத்தனையோ கட்சிகள், சுயேச்சைகள் போட்டியிடுகின்றன. பிரதான கட்சிகளின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தாலேயே சுயேச்சைக் குழுக்கள் தோன்றியுள்ளன.
அரச சார்புக் கட்சிகள் தேர்தலில் அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றன. யாழ். மாநகர எல்லைக்குள் பொது மண்டபங்களை அரச கட்சிகளுக்கு வழங்கும் மாநகர சபை ஆணையாளர் ஏனைய கட்சிகளுக்கு அவற்றை வழங்க மறுக்கிறார் - என்றார். (ங-4)

> "அரசு பொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது. தேர்தலின் பின்னர் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு விலைகள் அதிகரிக்கும்.


## குளவி கொட்டியவர் ஆஸ்பத்திரியிலேயே உயிரிழந்தார்

வவுனியா, ஓக. 12
வேலி அடைப்பதற்காக பனை ஓலை வெட்டியபோது குளவி கொட்டி வவுனியா, காத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த செ.பிரபாகரன் (வயது -30) வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி சாவடைந்தார். இந்தத் தகவலை அவருடைய மனைவி தெரிவித்துள்ளார்.
'குளவி கொட்டிய நிலையில் செ.பிரபாகரன் கடந்த 7 ஆம் திகதி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் மறுநாள் 8 ஆம் திகதி மருத்துவமனையில் உயிரிழந்தார். அன்றைய தினமே அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது எனவும் அவரது மனைவியால் தெரிவிக்கப்பட்டது.(ஓ)

## பால்மா தொடர்பில் நியூஸிலாந்து அதிகாரிகள் பேச்சு

கொழும்பு, ஓக. 12
தமது நாட்டு பால்மா தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து நியூஸிலாந்து அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.
எனினும் இந்தப் பேச்சு தொடர்பில் தகவல்கள் எதனையும் உள்ளூர் அதிகாரிகள் வெளியிடவில்லை.
இந்த நிலையில் இலங்கையின் சந்தையில் உள்ள தமது பால்மாக்களில் டிசிடி பதார்த்தம் இல்லை என்று பொன்டேரா நிறுவனம் அறிவித்துள்ளது.
ஐ.டி.ஐ. நிறுவனம் தமது பால்மாக்களில் டிசிடி பதார்த்தம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளமை பொய்யான தகவல் என்று பொன்டேரா குறிப்பிட்டுள்ளது. (ச)

# செப்ரெம்பர் முதலாம் திகதி கிளிநொச்சி வரை ரயில் சேவை



யாழ்ப்பாணம், ஓக. 12
கிளிநொச்சி வரையான ரயில் சேவை செப்ரெம்பர் முதலாம் திகதி ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்திய அரசின் நிதியுதவியுடன் வவுனியா-யாழ்ப்பாணம் வரையான தண்டவாளப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தற்போது கிளிநொச்சி வரையிலான தண்டவாளப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதனால் எதிர்வரும்18ஆம் திகதி கிளிநொச்சிக்கான பரீட்சார்த்த சேவை நடைபெறவுள்ளது என புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்தச் சேவையானது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அத்தோடு இந்த வருட இறுதிக்குள் பளை வரைக்கும் ரயில் சேவை விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, புகையிரதப் பாதை புனரமைப்பதற்கான ஒரு தொகுதிப் பொருள்களுடன் இரண்டு ரயில்கள் கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

## தேன் எடுக்கச் சென்றவரை கொட்டித் தீர்த்தன குளவிகள்

தென்மராட்சி, ஓக. 12
பாதுகாப்பு அங்கியின்றி பொந்துத் தேன் எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கானார்.
கொடிகாமம் எருவிலில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த மணியம் சிவயோகராசா (வயது-49) என்பவரே இவ்வாறு குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார்.
மழை பெய்ததையடுத்து குளவிகள் மரக் கொட்டுக்குள்ளிலிருந்து பறப்பதை அவதானித்த குறித்த நபர் புகையை ஊதி தேன் எடுக்க முற்பட்டார். அப்போது திடீரென கூட்டிலிருந்து புறப்பட்ட குளவிகள் அவரது உடம்பு முழுவதும் மொய்த்து தாக்கியுள்ளன.
குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ங-9)

## கூட்டமைப்பு வெல்வது உறுதி தேவை அதிகளவு வாக்குகளே

''வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெல்லுவது உறுதி. எனவே, கூட்டமைப்பு அமோக வாக்குகளினால் வெற்றியடைய வேட்பாளர்கள் அனைவரும் பாடுபடவேண்டும்.''
இவ்வாறு கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கான செயலமர்வுக்கு நேற்றுத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
''வெளிநாடு சென்றுள்ள கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாடு திரும்பியவுடன் எமது கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்தவாரம் வெளியிடப்படும். வேட்பாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் கூட்டமைப்பின் வெற்றிக்காக மக்களுடன் சேர்ந்து பாடுபட வேண்டும்'' - என்றும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல் விதியை மீறி சுவரொட்டிகள் கண்டுகொள்ளாத பொலிஸார்

யாழ்ப்பாணம், ஓக. 12
வடமராட்சிப் பகுதியில் அரச தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலர் தேர்தல் விதிகளை மீறுவதுடன் பொது மக்களுக்கு சொந்தமான மதில்களில் தமது சுவரொட்டிகளை இரவோடு இரவாக ஒட்டிச் செல்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
பிரதான வீதிகளில் மாத்திரமல்லாமல் சிறு சிறு ஒழுங்கைகளில் உள்ள மதிலையும் இந்த வேட்பாளர்கள் விட்டுவைப்பதில்லை. குறித்த பாதைகளூடாக பொலிஸார் பயணிக்கின்ற போதும் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை ஏதும் எடுப்பதில்லை.
அரச கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களின் சுவரொட்டி என்பதால் அவற்றை அகற்றுவதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். எனவே குறித்த சுவரொட்டிகளை அகற்றி உதவுமாறு பொதுமக்கள் பொலிஸாரிடம் கோரியுள்ளனர். (ங-422)

# தற்காலிக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
''தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
வாக்களிப்பின் போது, தேர்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து வகையான ஆவணங்களைத் தவிர ஏனைய ஆவணங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்'' இவ்வாறு தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு , மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான தேர்தல்களின்போது வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபித்த பின்னரே வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.
வாக்காளர்கள், ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் , அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை மற்றும் மத குருமார்கள் சார்பாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை என்பவற்றில் ஒன்றை வைத்திருந்தால் மாத்திரமே வாக்களிக்க முடியும். ஏனைய எந்த ஆவணங்களும் ஏற்றுக் கொள்ளப்படாது.
2011 இல் நடத்தப்பட்ட தேர்தல்களின் போது தேர்தல் திணைக்களத்தினால் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை வைத்திருப்பவர்கள் தாம் வதியும் பிரிவுக்குரிய கிராம அலுவலருடாக 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேட்டுக்கு உரியவாறு அதனை மீளவும் செல்லுபடியானதாக மாற்ற வேண்டும்.
இதேவேளை, 2008 , 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் இந்தத் தேர்தலுக்குச் செல்லுபடியாகாது.
தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற விரும்புவர்கள் தமது 1 ¼ x 1



அளவுடையதான• (தேசிய அடையாள அட்டையின் அளவு) இரண்டு புகைப்படங்களுடன் கிராம அலுவலரிடம் சென்று தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்தல் வேண்டும்.
குறித்த கிராம அலுவலர்கள் மூலமாக வாக்கெடுப்பு தினத்துக்கு முன்னர் உரிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்- என்றார். (ங-4)

## கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கான செயலமர்வு நேற்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஓக. 12
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கான செயலமர்வு ஒன்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.
இந்தச் செயலமர்வில் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியர, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் அனைவரும் பங்குபற்றினர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா சுரேஷ் பிரேமச்சந்திரன், மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும், சட்டவாளர் வி.ரி. தமிழ்மாறன் உட்படப் பலரும் கலந்து கொண்டு இதன்போது விளக்கமளித்தனர். (ங-400-426)

# நல்லூர் கொடியேற்றத்துக்காக எடுத்து வரப்பட்டது கொடிச்சேலை



யாழ்ப்பாணம், ஓக. 12

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பொருந்திரு விழாவை முன்னிட்டு திருவிழாவுக்கான கொடிச்சேலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்துக்கு எடுத்துவரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெற்றது.

இன்று திங்கட்கிழமை கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய முறைப்படி வருடந்தோறும் கொடிச்சேலை முதல் நாள் ஆலயத்துக்கு எடுத்துவரப்படுவது வழமையாகும்.

செங்குந்தர் மரபில் வந்த சிவஞான முதலியாரின் பேரன் கந்தையா தர்மகுலசிங்கத்தால், திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்தியமூர்த்தியின் இல்லத் தில் விசேட பூசைகள் இடம்பெற்று அங்கிருந்து மங்கல வாத்தியங்களுடன் கொடிச்சேலை எடுத்துவரப்பட்டு, சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வைரவநாதர் வல்லிபுரசாமியால் அமைக்கப்பட்டுள்ள கொடித் தேர் மடத்துக்கு கொண்டுவரப்பட்டது.

கொடித்தேர் மடத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து சட்டநாதர் வீதி பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு கொடிச் சேலை தேரில் எடுத்துவரப்பட்டு ஆலய பிரதான சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-14-7)

# மீனவர் பாவனைக்கு சுழிபுரம் இறங்குதுறை



யாழ்ப்பாணம், ஓக. 12

யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தின் 37 மில்லியன் ரூபா நிதியுதவியில் புனரமைப்புச் செய்யப்பட்ட சுழிபுரம் இறங்குதுறை நேற்று முன்தினம் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த குறித்த துறைமுகப் பகுதி அண்மையில் விடுவிக்கப்பட்ட நிலையில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் யு. என். எச்.சி.ஆர்.நிறுவனத்தால் புனரமைப்பு செய்யப்பட்ட குறித்த துறைமுகம் நேற்று முன்தினம் முதல் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தனாவால் திறந்து வைக்கப்பட் டது.

அத்துடன் இறங்குதுறைக்குச் செல்லும் சவுக்கடி வீதி மற்றும் இளைப்பாறும் மண்டபமும் மீனவர்களது பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (வ-14)

# கைத்தொழில் முயற்சி குறித்து பயனாளிகளுக்கு செயலமர்வு

கிளிநொச்சி, ஓக. 12

கிளிநொச்சி மாவட்டத்தின் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் சுயதொழில் பயனாளிகளுக்கு புதிய கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான செயலமர்வுகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் நடத்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சசிகரனால் புதிய கைத்தொழில் முயற்சிகள் தொடர்பாக பல்லூடக எறிகருவி மூலம் பயனாளிகளுக்கு செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களைக் கொண்ட ஏழைக் குடும்பங்கள் பிரதேச செயலகங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு புதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு சுய தொழில் உதவியாக தலா 40 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன. மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, பூநகரி, பளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களில் விரைவில் புதிய தொழிற் பயிற்சி செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வடக்கு மீன்பிடித் துறைக்கு அரசால் 70 பில்லியன் நிதி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12

வட மாகாணத்தின் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கென இதுவரை 70 பில்லியன் ரூபா நிதியை அரசு வழங்கியுள்ளதுடன் யாழ்.மாவட் டத்தில் 3ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜிதசேனா ரத்ன தெரிவித்தார்.

மாதகல் சேந்தாங்குளம் பகுதி யைச் சேர்ந்த கடற்றொழிலாளர் களுக்கு படகு மற்றும் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமு தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்காலச் சூழ்நிலைக்கு முன்னர் 45 சத வீதத்துக்கும் அதிகமாக இருந்த மீன்பிடித் தொழில் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான மீன்பிடித்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதால். மீண்டும் மீன்பிடித் தொழில் வளர்ச்சி கண்டுள்ளது.

வட மாகாணத்தில் இதுவரை அரசால் 70 பில்லியன் ரூபா நிதி மீன்பிடி அபிவிருத்திக்கு செலவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரம் மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்று மாதகல் சேந்தாங்குளம் கடற்றொழிலாளர்களுக்கு 9 படகுகள், உபகரணங்கள் வழங்கி வைக்கப்படுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஏனைய இடங்களுக்கும் படகுகள் வழங்கி வைக்கப்படவுள்ளன- என்றார். (வ-14)



இலங்கை விமானப் படையும் இலங்கைக்கு நட்பு அடிப்படையில் வருகை தந்துள்ள அமெரிக்க விமானப்படை வீரர்களும் இணைந்து கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அச்செழு வைசப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்படனர். (வ-86)

# இந்திய மீனவர் அத்துமீறலை நிறுத்தக் கோரிய மக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 12

இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு மாதகல் பகுதி கடற்றொழிலாளர்கள் நீரியல் வளத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கடற்படை அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மாதகல் சேந்தாங்குளம் பகுதி மீனவர்களது பிரச்சினை தொடர்பில் நேரடியாக நேற்றுமுன்தினம் கலந்துரையாடிய நீரியல் வளத்துறை அமைச்சர் மாதகல் பகுதி மீனவர்களது தற்போதைய பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இதன்போது மாதகல் கடற்பரப்பில் இழுவைப் படகுகள் மற்றும் சாதாரண படகுகளுடன் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். ஆனால் இதனை கடற்படையினர் கண்டும் காணாதது போல் இருப்பதாக மீனவர்கள் தமது பிரச்சினையை முன்வைத்தனர்.

> மாதகல் கடற்பரப்பில் இழுவைப் படகுகள் மற்றும் சாதா ரண படகுகளுடன் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் உடனடியாக எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (வ-14)



# வல்லை சந்தி வீடுகளிலிருந்து விரைவில் வெளியேறும் படையினர்

வடமராட்சி, ஓக. 12

வல்வெட்டித்துறை சந்தியில் வீடுகளில் நிலைகொண்டுள்ள ராணுவம் இன்னும் ஒரு வாரத்தினுள் வெளியேறி ஊரிக்காடு ராணுவ முகாம் பகுதிக்குச் செல்லவுள்ளதாக ஊரிக்காடு ராணுவ முகாமைச் சேர்ந்த ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஊரிக்காடு இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் மேலதிக கட்டடங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நிலையில் வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினரின் பாவனைப் பொருள்கள் மற்றும் தளபாடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதுடன் முகாமைச் சூழவுள்ள முட்கம்பி வேலிகளும் அகற்றப்பட்டு வருகின்றன.

வல்வெட்டித்துறை மத்திய சந்தையைச் சூழவுள்ள பகுதியில் இருந்து ராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்று கடந்த வருடம் எடுக்கப்பட்ட சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஜனாதிபதி, அரச அதிபர் மற்றும் ராணுவத் தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் ஊடாக மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் ஜனாதிபதியை நேரில் சந்தித்தும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

ராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் வசித்த குடியிருப்பாளர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு கடந்த மாதம் பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்களினூடாகவும் வெளியிடப்பட்டதுடன் இராணுவ முகாம் பொறுப்பதி காரியிடமும் வழங்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் அந்த இடங்களை விட்டு வெளியேறும் போது அவற்றை உரியவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் ஊடாகப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும் -என்றார். (வ-8)

# வடக்கிலுள்ள ஏழை மாணவருக்கு புலமைப் பரிசில் நிதி உதவி

அச்சுவேலி, ஓக. 12

வடக்கு மாகாணத்தில் 3,250 இற்கு மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு கற்றல் உதவிக்கான புலமைப் பரிசில் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் செயற்படும் 12 கல்வி வலயங்களில் இருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அவர்களின் வங்கி கணக்கு ஊடாக புலமைப் பரிசில் உதவு தொகை வழங்கப்படுகின்றது.

போர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மற்றும் தாய், தந்தையரை இழந்த மற்றும் பாதிப்புகளுக்கு உள்ளாகிய நிலையில் பாடசாலைகளில் தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக்கான உதவு தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து 500 இற்கும் குறையாத மாணவர் தொகையும் தீவகம், முல்லைத்தீவு, மணலாறு ஆகிய பகுதிகளில் இருந்து மேலதிகமான மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக்கான உதவுதொகை வழங்கப்ப டுகின்றன.

வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோ சனைக்கு அமைய கல்வி அபிவி ருத்தி நிதியில் இருந்து வழங்கப்படும் கல்வி ஊக்குவிப்பு உதவு தொகைக்கான மாணவர் தெரிவுகள் பாதுகாப்புத் தரப்பினரின் அனுசரணையுடன் நடைபெற்றன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கணக்கு சேமிப்பு புத்தகத்தில் உள்ள நிதியில் இருந்து மாணவர்கள் தமக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் பொருள்களை கொள்வனவு செய்து பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-11)

# மோசமான வீதிகளால் மக்களுக்கு சிரமங்கள்

வவுனியா, ஓக. 12

வவுனியாவில் அமைந்துள்ள பல முக்கிய வீதிகள் மோசமான நிலையிலுள்ளதால் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

பூந்தோட்டம் சந்தியில் இருந்து பூந்தோட்டம் பாடசாலைக்குச் செல்லும் வீதி, பூந்தோட்டம் சந்தியில் இருந்து மகாறம்பைக்குளம் வீட்டுத்திட்டம் மகாறம்மைக்குளம் பாடசாலை ஆகிய இடங்களுக்கு செல்லும் வீதி, வவுனியா இறம்பைக்குளம் வீதியூடாகச் சென்று தபால் பெட்டிச் சந்தியில் இருந்து சிதம்பரபுரம் செல்லும் வீதி ஆகியவற்றின் ஊடாக சமணங்குளம், முருகனூர், கல்நாட்டிகுளம், கோமரசன்குளம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியும். ஆனால் இந்த வீதிகள் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இந்த வீதிகள் ஊடாக பாடசாலை மாணவர்கள் தொடக்கம் கர்ப்பிணிதாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலர் பயணம் செய்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட வீதிகளை மழை காலத்துக்கு முன்னர் புனரமைத்து வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-421)

# இரவில் அட்டகாசம் வீடுகளுக்கு கல்லெறி

## நித்திரையின்றித் தவிக்கும் மக்கள்

தென்மராட்சி, ஓக. 12

சாவகச்சேரி சங்கத்தானை டச்சு வீதிப் பகுதியில் இரவு வேளைகளில் நடமாடுவோரின் அட்டகாசத்தால் இரவுத் தூக்கம் பறிபோவதாக அந்தப் பகுதி மக்கள் தெரி விக்கின்றனர்.

இரவு வேளைகளில் வீதிகளில் கூக்குரலிட் டவாறு செல்லும் இந்தக் கும்பல் வீட்டுக்கு கற்களை எறிவதாகவும் இதனால் இரவு வேளைகளில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் வெளிச்சங்களை ஒளிரவிடும் வீடுகளுக்கு கற்களால் எறிந்துவிட்டுச் செல்வதாகவும் இந்தக் கும்பல் இரவு வேளைகளில் நடமாடுவதால் திருடர்களா அல்லது மது போதைக் கும்பல்களா எனத் தெரியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தக் கும்பலின் அட்டகாசம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த பொது மக்கள் இந்தக் கும்பலின் அட்டகாசத்தைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என விசனம் தெரிவிக்கின்றனர். (ந-9)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராசேந்திரம் (ஐபோம்)



கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசேந்திரம் நேற்று (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னர் -அன்னம்மா தம்பதியரின் மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், பிரிதா, கவிதா, வனிதா, தட்சாயினி, சுயேந்திரன் ஜான்சி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பூமணி, செல்லம்மா மற்றும் இராசமணி, சின்னராசா, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானசீலன், விஜயசந்திரன், சுரேஸ்தரன், நளினகாந்தன் ஆகியோரின் மாமனும், நவமணி, குணமணி, தவமணி, தெய்வேந்திரம், நாகரா, குணம், கந்தசாமி, இராசதுரை, வீரசிங்கம், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் கமலாதேவி, குணவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

92/10, இராமநாதன்வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அனுபாவதி துரைராஜா (லவ்லேன், உடுவில்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனுபாவதி துரைராஜா நேற்று (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை -சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும், ராஜராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, யோகேஸ்வரி, இராஜேந்திரன் (லண்டன்), குகேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திரனின் (லண்டன்) சிறியதாயும், விவேகானந்தன், நாகதாசன், தர்மராஜா (அப்பு), மதிவதனி, காஞ்சனா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், செல்வரட்ணம் (கனடா), இரத்தினேஸ்வரி (மலேசியா), காலஞ்சென்றவர்களான ரதிதேவி, புஸ்பலீலா, அழகுசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், வினோதினி, ராகுலன், விஷாகினி, காலஞ்சென்ற ராஜீவன் மற்றும் நிரஜா, சபிந்தன், சஜிதா, சஜிந்தன், சமிந்தன், காலஞ்சென்ற சத்தியா மற்றும் சிவதாஸ், அனுபா, தனுஜன், வினுஜன், தாரணி, தாரணன், லக்ஷிகா, செளமிகா, அக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், நிகாஷன், அஜானா, பிரித்திகா, சரோன், தனுஷ், விஹாஸ், நிருசுதன், சுஜன், சேயோன், கவிகா, டினுஷா, சுவிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2013) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனத்துக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லவ்லேன், உடுவில்
T.P- 0213211689

தகவல்;
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### இராமசாமி சுரேந்திரகுமார் (குமார்)



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சுரேந்திரகுமார் நேற்று முன்தினம் (10.08. 2013) சனிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி (ஆசிரியர்) -பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும், நளினியின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரி, சந்தியபாமா, காந்திமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கராசா, இரவீந்திரரட்ணம், குபேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (14.08.2013) புதன்கிழமை கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: இரவீந்திரரட்ணம்
சத்தியபாமா (அக்கா) மற்றும்
அவரது குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகராசா சரஸ்வதி



இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கலாசாலைவீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சரஸ்வதி நேற்றுமுன்தினம்(10.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா -தங்கப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சண்முகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாரதா மற்றும் செல்வரட்ணம்(யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் சசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கிளொபிரடிக் (குமார்), சுவேந்திரராணி, உதயணன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கதிரமலை, சின்ராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரணியா, நிவேதா, யாதவன், நிரோஷிகா, யனுசிகா, அஸ்வித்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்புர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111/11, கலாசாலை வீதி,
திருநெல்வேலி. 077 4251332

தகவல்;
குடும்பத்தினர்.

### திருமதி இந்திரவதனி கிருபாகரன்



பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல.207, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரவதனி கிருபாகரன் கடந்த (05.08.2013) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் கிருபாகரனின் அன்பு மனைவியும், சண்முகராசா- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், கம்சிகா, அஞ்சலி, அனுஜன், அருளினி ஆகியோரின் பாசமிகு தாயும், இந்திரசேனன், இந்திரஜீவினி, காலஞ்சென்ற இந்திர ஜீவிதா மற்றம் இந்திரஜித் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணவேணி, பார்த்தீபன், கிருஷ்ணதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (10.08.2013) சனிக்கிழமை நல்லூர் பூநகரியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர், பூநகரி.

தகவல்;
குடும்பத்தினர்.

# பலாலி ஆசிரியர் கலாசாலையை நேரில் பார்த்த குழு கதறி அழுதது

அச்சுவேலி, ஓக. 12

பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகத்தை நேரில் பார்வையிட்டு ஆசிரியர்கள், கல்வியாளர் குழு அணியினர் துயரம் தாங்காது கண்ணீர் விட்டு அழுதனர்.

பாதுகாப்புத் தரப்பினரின் பயன்பாட்டில் தற்போதுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலையின் 52 ஏக்கர் பரப்பளவு கொண்ட வளாகத்தை அண்மையில் ஆங்கில பயிற்சிநெறி ஆசிரியர் அணி மற்றும் கல்வியாளர் குழு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

தற்போது பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள், விரிவுரையாளர்கள் ஒரு தடவை பலாலி ஆசிரியர் கலாசாலையின் வளாகத்தை பார்வையிட அனுமதி வழங்குமாறு பாதுகாப்புத் தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

> அவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பாதுகாப்புத் தரப்பினர் பார்வையிட விரும்புவோரின் பெயர் பட்டியலை பெற்று மேலிடத்தின் அனுமதி யுடன் தாங்கள் ஏற்பாடு செய்த வாகனத்தில் அவர்களை பலாலிக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பாதுகாப்புத் தரப்பினர் பார்வையிட விரும்புவோரின் பெயர் பட்டியலை பெற்று மேலிடத்தின் அனுமதியுடன் தாங்கள் ஏற்பாடு செய்த வாகனத்தில் அவர்களை பலாலிக்கு அழைத்துச் சென்றனர். ஆசிரியர் கலாசாலையின் 52 ஏக்கர் வளாகத்தை சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதித்தனர்.

அங்கு மாணவர்களின் பயன்பாட்டில் இருந்த கட்டடங்கள், வழிபாட்டிடங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், விடுதிகள், பயன்தரும் மரங்கள் மற்றும் நிழல் தரும் மரங்களை நேரில் பார்த்து நிலை தளர்ந்தனர். அதில் தாங்கள் தங்கியிருந்தது, கற்றலுக்கு பயன்படுத்திய நிலைகளை மீள நினைத்து மனமுருகினர்.

ஆசிரியர்களின் கல்விப் புலமாக விளங்கிய பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகம் இராணுவத் தளபாடங்கள் மற்றும் பழுதடைந்த வாகனங்களின் தரிப்பிடமாகவும் வழிபாட்டிடங்கள், பராமரிப்பு இன்றியும் இருப்பதை கண்டு கலங்கினர். மீளாத்துயரத்துடன் பாதுகாப்புத் தரப்பினருடன் குறிப்பிட்ட நேரத் துக்கு இடத்தை விட்டு வெளியேறினர். (வ-11)

# பஸ்தரிப்புக்கு நெல்லியடியில் பாதுகாப்பான இடம் தேவை

## வடமராட்சி மக்கள் கோரிக்கை முன்வைப்பு

நெல்லியடி, ஓக. 12



நெல்லியடி பகுதியில் வீதி அகலிப்புப் பணிகளும் வடிகால் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருவதால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது மழையும், மழை இல்லாத போது கடும் வெயிலும் நிலவுவதால் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பஸ்தரிப்பு கொட்டகைகளில் பயணிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

குறித்த பஸ்தரிப்பு கொட்டகைக்கும் பிரதான வீதிக்கும் இடையில் வடிகால் அமைக்கும் பணி இடம்பெறுவதால் முதியோர்கள், அங்கவீனர்கள், நோயாளர்கள், குழந்தைகள் உட்பட இதனைக் கடந்து வருவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தற்காலிக பஸ்தரிப்புக் கொட்டகையை வீதியின் எதிர்ப் புறத்திலோ அல்லது பாதுகாப்பான ஒரு இடத்தை தெரிவு செய்தோ அமைத்துத் தருமாறும் மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# போக்குவரத்தில் இடைஞ்சல்

பருத்தித்துறை, ஓக. 12

வடமராட்சி பகுதிக்கு அரசியல் பிரமுகர்களின் தொடர் வருகையால் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை மேற்கொள்வதால் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடிப் பகுதியில் நேற்றுமுன்தினமும் கட்சி அலுவலகங்களைத் திறப்பதற்கு அமைச்சர்கள் வருகை தந்ததால் பாதுகாப்பு நிமிர்த்தம் வாகனங்கள் நிறுத்தப்பட்டதால் சில மணிநேரங்கள் போக்குவரத்தில் தடங்கள் ஏற்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து மந்திகை, மாலுசந்தி, நெல்லியடி போன்ற பல இடங்களில் வீதி அகலிப்பு பணிகளும், நீர்வாய்கால்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வரும் இந்த வேளையில் சாதாரணமாகவே போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலையில் பிரமுகர்கள் வருகையால் போக்குவரத்து இடைஞ்சல் அதிகரிக்கிறது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-422)

# வீதி அகலிப்புப் பணியால் போக்குவரத்து நெருக்கடி



வடமராட்சி, ஓக. 12

பருத்தித்துறை நகரில் வீதி அகலிப்புப் பணிகள், புதிதாக வடிகால்களும் அமைக்கும் பணிகளும் மிகத் துரிதமாக இடம்பெற்று வருவதால் போக் குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தனியார் சிற்றூர்திகள், ஓட்டோக்கள் தரித்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தனியார் சிற்றூர்திகளும், ஒட்டோக்களும் இ.போ.ச தரிப்பிடத்தில் நிலைமைக்கு ஏற்பத் தங்கி நின்று சேவைகளில் ஈடுபடுகின்றன. (வ-8)

# வல்வெட்டி சபையின் செயற்பாடுகள் பாதிப்பு

## அதிகாரிகளின் செயலால் என்று தலைவர் குற்றச்சாட்டு

வலி. வடக்கு, ஓக.12

அரசியல் காரணங்களுக்காக புதிய ஊழியர்களுக்கு நியமனம் வழங்க அனுமதி வழங்கப்படாமையால் சபையின் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள் ளன என்று வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் நடராசா அனந்தராஜ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பித்துள்ள நிலையில் ஆலய சுற்றாடலில் சுகாதாரப் பணி களை மேற்கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும் வல்வெட்டித்துறை நகர சபைக்கு உரியதாகும்.

சபையில் தற்போது போதியளவு தொழிலாளர்கள் இல்லை. இந்நிலையில் சபை எல்லைக்கு உட்பட்ட மக்களுடைய முழுத்தேவைகளையும்நிறைவேற்ற முடியாத நிலைமை காணப்படுகின்றது. (வ-86)



## தமிழ்வாழ நின்கொடியை ஏற்று

(நேரிசை வெண்பா)

இன்பத் தமிழ் மண்ணும் ஏற்றமிகு நம்மொழியும்
உந்தன் அருள்கூடி வாழ்வுபெறும்- இந்நாள்
கொடியேற்றி எம்மண்ணின் கொடுவினைகள் ஓட்டு
மிடியற்று வாழட்டும் மண்

ஏத்திப் பிழைப்பாரால் எத்தித் திரிவாரால்
கூத்துக் களமாகு (து) எங்கள் மண்- காத்திருப்போம்
வல்ல தமிழ்வாழ நின்கொடியை ஏற்றிடுவாய்
நல்லைக் குமரோனே இன்று

ச.லலீசன்

## நல்லைக் குமரனுக்கு கொடி ஏறட்டும்

நல்லூர் முருகனுக்கு கொடி ஏறட்டும்
நம்மவர் குறைதீர்க்க கொடி ஏறட்டும்
செந்தமிழர் புகழ் மணக்க கொடி ஏறட்டும்
செம்மையான வாழ்வு வர கொடி ஏறட்டும்
தெள்ளுதமிழ் அழகனுக்கு கொடி ஏறட்டும்
தீந்தமிழால் இசைபாட கொடி ஏறட்டும்
நல்லதோர் தீர்வுவர கொடி ஏறட்டும்
நல்லைக் குமரனுக்கு கொடி ஏறட்டும்

வேலனடியாள்.

## தமிழ் ஏற்றம் பெற கொடி ஏறுக

அன்பர் பயம் கெடுக்கும்
ஐயன் கொடி ஏறுக
துன்ப மலை துடைக்கும்
தூயன் கொடி ஏறுக
எங்கள் தமிழ் ஏற்ற முற
எந்தை கொடி ஏறுக
துங்கமுயர் நல்லூரான்
தூ வெண் கொடி ஏறுகவே

சா.கார்த்திகேசு



## தமிழக அரசின் நடவடிக்கை சரியல்ல

புதுடில்லி, ஓக.12
மத்திய அரசு எடுக்கும் முடிவுகளுக்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவது சரியல்ல என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.
கடலூரில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
''தேசிய விவகாரங்களில் காங்கிரஸ் எடுக்கும் முடிவுதான் இந்தியாவுக்கு நல்லது. இதுபோன்ற விவகாரங்களில் தமிழக அரசு தனித்துச் செயற்படாமல் தேசிய நீரோட்டத்துடன் இணைந்து செயல்பட வேண்டும். மத்திய அரசின் முடிவுகளுக்கு தமிழகம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவிப்பது சரியல்ல'' என்று தெரிவித்தார். (ற)



ஜம்மு காஷ்மீரின் குலீத் பகுதியில் நேற்றுமுன்தினம் இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் பெரும் வன்முறையாக மாறியது. அதில் ஒருவர் உயிரிழந்தார். வன்முறையை அடுத்து பொலிஸார் தடியடி நடத்தி வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். தற்போது ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மற்றும் ஜம்மு மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 25 லட்சத்துக்கு விற்பனையான பால் கறக்கும் எருமை



புதுடில்லி, ஓக.12
இந்தியாவின் வட மாநிலத்தில் எருமை மாடு ஒன்று 41 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
கால்நடைகள் கண்காட்சியில் அதிகளவு பாலை கறந்ததன் மூலம் முதற்பரிசை வெற்றிக்கொண்ட லக்ஷ்மி எனும் எருமை மாடே இந்திய விலைப்படி 25 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது
இந்த எருமை மாடு தினந்தோறும் 28 லீட்டர் பால் கறந்து ஏற்கனவே பல பரிசுகளையும் வென்றுள்ளதாம்.
இந்த விலைக்கு இந்தியாவில் ஆடம்பர காரொன்றை கொள்வனவு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## காதலிக்குமாறு பகிடிவதை: கல்லூரி மாணவி தற்கொலை

போபால், ஓக.12
காதலிக்குமாறு பகிடிவதை செய்ததால் மனமுடைந்த கல்லூரி மாணவி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.
இந்தியாவில் போபால் நகரில் உள்ள தனியார் கல்லூரியில் கல்வி கற்று வந்தவர் அனிதா சர்மா. அவர் வீட்டில் யாருமற்ற வேளையில் தூக்கிட்டுத்தற்கொலை செய்து கொண்டுள்ளார்.
விசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் அங்கிருந்து கடிதம் ஒன்றைக் கண்டெடுத்தனர். அதையடுத்தே இந்தச் சம்பவம் தெரியவந்தது.
''இந்தக் கல்லூரியில் சேர்ந்த நாள் முதற்கொண்டு இன்று வரை என்னைத் தொடர்ந்து பகிடிவதை செய்து வருகிறார்கள். இரண்டாம் ஆண்டு வந்தால் விட்டு விடுவார்கள் என நினைத்தே முதலா ஆண்டை கழித்தேன். ஆனால் இப்போதும் அது தொடர்கிறது. காதலிக்குமாறு வற்புறுத்துகிறார்கள். அதனாலேயே மனமுடைந்து இந்த முடிவை எடுத்துள்ளேன்'' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதையடுத்து 4 மாணவிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# ஒபாமாவை போன்று செயற்பட வேண்டும்

### மன்மோகனை வலியுறுத்துகின்றார் இந்திய முன்னாள் தளபதி

புதுடில்லி, ஓக.12
அமெரிக்க ஜனாதிபதியைப் போன்று இந்தியப் பிரதமரும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இந்திய விமானப்படையின் முன்னாள் தளபதி அனில் டிப்னிஸ்.
இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ''அமெரிக்காவில் ஜனாதிபதி, இராணுவத் தளபதிகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்துகிறார். ஆப்கனில் அல்லது ஈராக்கில் பணியில் இருக்கும் இராணுவத் தளபதிகளுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுகிறார். நேரில் சந்திக்கும் சந் தர்ப்பங்களை அதிகரித்துக் கொள்வார்.
ஆனால் இந்தியாவில் அப்படியில்லை. முப்படைத் தளபதிகளைப் பிரதமர் சந்திப்பதில்லை. பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் முப்படை தளபதிகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்த வேண்டும். பிரதமரை அணுகி, முக்கிய விடயங்கள் குறித்து, விவாதிக்கும் உரிமை, முப்படை தளபதிகளுக்கு உண்டு.
எல்லை தாண்டாமலேயே தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் அயல் நாடுகளில் செயற்படும் பயங்கரவாத முகாம்கள் மீது, விமானப்படையினர் தாக்குதல் நடத்த முடியும். பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினால் நாம் பதிலடி மட்டுமே கொடுக்கிறோம். அதற்குப் பதிலாக, இதுபோன்ற விடயத்தில், மிக தீவிரமாகவும், ஆதிக்கமனப்பான்மையுடனும், நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என்று தெரிவித்தார்.(ற)

## பாகிஸ்தானை விடவும் வலிமையானது இந்தியா

### நாச்சியப்பன் கருத்து

சென்னை, ஓக.12
பாகிஸ்தான் இராணுவத்தை விடவும் இந்திய இராணுவம் அனைத்து வகையில் வலிமையாக இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
திருச்சியில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் வந்த மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.
அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
''இந்திய இராணுவத்தினர் ஐந்து பேர் உயிரிழந்ததை அடுத்து இந்திய இராணுவம் வலிமையற்றிருக்கின்றது என்று கூறமுடியாது.
பாகிஸ்தான் இராணுவத்தை விட இந்திய இராணுவம் அனைத்து வழிகளிலும் மிக வலிமையாக இரு்கின்றது. அது பாகிஸ்தானுக்கும் தெரியும்'' என்று தெரிவித்தார்.(ற)

## இயங்கத் தொடங்கியது அணு நீர்மூழ்கிக் கப்பல்

புதுடில்லி, ஓக.12
இந்தியாவில் கட்டப்பட்ட அணு சக்தியால் இயங்கக் கூடிய முதல் நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ். அரிஹாந்தில் பொருத்தப்பட்டுள்ள அணு உலை இயங்க ஆரம்பித்துள்ளது.
2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஐ.என்.எஸ்.அரிஹாந்த்கப்பலைவைபவ ரீதியாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடற்படையிடம் ஒப்படைத்தார்.
விசாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட கப்பலின் அணு உலை செயற்பட ஆரம்பிக்காததால் அந்த நீர்மூழ்கிக் கப்பல் மட்டுப்பட்ட அளவில் துறைமுகத்திற்குள் மட்டுமே சோதனை முறையில் இயக்கப்பட்டு வந்தது. தற்போது அணு உலை இயங்க ஆரம்பித்துள்ளதால் இந்தக் கப்பலை இந்தியா ஆழ் கடலில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
டீசல் மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களால் நீண்ட நாள்கள் தண்ணீருக்கு கீழ் இருக்க முடியாது. ஆனால் அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களால் மாதக் கணக்கில் நீருக்குள் பயணம் செய்யமுடியும். (ற)

## 25 லட்சம் கோடி ரூபா ஊழல்

### சோனியாவின் மருமகன் மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக.12
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகன் றொபர்ட் வாத்ரா, ரூ.25 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழலில் ஈடுபட்டார் என்று அரியானா மாநிலஐஏஎஸ்அதிகாரிஅசோக் கெம்கா தெரிவித்துள்ளார்.
இது குறித்து விரிவாக விசாரித்து 100பக்கங்கள்கொண்ட அறிக்கையை அவர் அரியானா மாநிலஅரசிடம்அளித்துள்ளார்.
''றொபேர்ட் வாத்ராவின் நிறுவனம் நிலம் வாங்குவதில் பெருமளவு மோசடிகளைச் செய்துள்ளது.
வீடுகள் கட்டுவதற்கான உரிமங்கள் பெற்றுத் தர ஏக்கர் ஒன்றுக்கு 1 கோடி ரூபாய் வரை பேரம் பேசப்பட்டு, லஞ்சம் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் ஏட்டு ஆண்டுகளில் 20 ஆயிரம் கோடி ரூபாய் வரை பேரம் நடந்தியிருக்கலாம்.ஆனால், இது போன்ற உரிமங்கள் பலவற்றை பெற்றுத் தந்த ராபர்ட் வாத்ராவின் நிறுவனம், ஏக்கர் ஒன்றுக்கு, 15.78 கோடி ரூபாய் வரை விலை பெற்றுள்ளது. இதன் மூலம், 25 லட்சம் கோடி ரூபாய்அளவுக்குமெகாஊழல் நடந்திருக்க வாய்ப்பு உள்ளது'' என்று தெரிவித்துள்ளார் அசோக் கெம்கா. (ற)

# பாகிஸ்தான் அத்துமீறல்: 7 மணி நேரம் துப்பாக்கி மோதல்



ஸ்ரீநகர், ஓக.12
இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்வதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய இராணுவத்தினர் 5 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து எல்லைப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.
அது தணியும் முன்னர் மீண்டும் எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அதையடுத்து இந்திய இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சமர் சுமார் 7 மணி நேரம் இடம்பெற்றுள்ளது.
இது தொடர்பாக பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் எஸ்.என்.ஆச்சார்யா கருத்துத் தெரிவிக்கையில், ''ஜம்மு காஷ்மீர், பூஞ்ச் மாவட்டத்தில் கட்டுப்பாட்டு எல்லைக்கோடு பகுதியில் உள்ள நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் அத்து மீறி தாக்குதல் நடத்தியுள்ளது. வெள்ளிக்கிழமை இரவு 10.20 மணிக்குத் தொடங்கிய இந்த தாக்குதல் சனிக்கிழமை அதிகாலை வரை, அதாவது சுமார் 7 மணி நேரம் நடந்துள்ளது.
பாகிஸ்தான் இராணுவம் சுமார் 7,000 துப்பாக்கி ரவைகளைப் பயன்படுத்தியுள்ளது. அதற்கு இந்திய இராணுவம் தகுந்த பதிலடி கொடுத்தது. பாகிஸ்தானின் அண்மைய அத்துமீறல்களில் இதுவே மிகப் பெரியதாகும். இந்தத் தாக்குதல்களால் இந்திய வீரர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. எனினும், எல்லையில் கடும் பதற்றம் நிலவிவருகிறது'' என்று அவர் தெரிவித்தார்.
துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் பூஞ்ச் நகரம் வரை கேட்டதால் அந்தப் பகுதி மக்கள் பீதியடைந்ததுடன், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். (ற)

# தீவிரமாகும் சிரிய இராணுவத் தாக்குதல்

## இரு தினங்களில் 40க்கும் மேற்பட்டவர்கள் சாவு

அலப்போ, ஓக.12
சிரியாவின் வடமேற்குப் பகுதிகளில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்கள் மீது சிரிய இராணுவம் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது.

வடமேற்கு மாகாணமான லடகியாவில் இராணுவத்தினர் நடத்திய ரொக்கெற் தாக்குதல்களில் நேற்றுமுன்தினம் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்குள்ள மனித உரிமை அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் 10 பேரும், கிளர்ச்சியாளர்கள் 6 பேரும், வெளிநாட்டவர்கள் 4 பேரும் அந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என்று அந்த அமைப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

அங்கு அரச தரப்பினர் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதால் சேத விவரங்கள் குறித்து சரியான தகவல்களைப் பெற முடியவில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அலப்போ நகரின் வடமேற்குப் பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் 20க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பலர் காயமடைந்துள்ள நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கக் கூடும் என்றும் கூறப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து முக்கிய நகரங்கள் சிலவற்றை இராணுவத்தினர் கைப்பற்றியதை அடுத்து, அரச தரப்பு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. (ற)



# ஈராக்கில் தாக்குதல்

## 80 பேர் சாவு

பாக்தாக், ஓக.12
ஈராக்கின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 80 பேர் உயிரிழந்துள்ளனர். சந்தைகள், உணவு விடுதிகள் உட்பட மக்கள் செறிந்து நடமாடும் பகுதிகளை இலக்கு வைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மக்களின் புனித பெருநாளான ரமழான் கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்த தருணத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரமழான் காலத்தில் மட்டும் இந்த ஆண்டு 670 பேர் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். (ற)

# பாகிஸ்தான், ஏமனில் தூதரகங்கள் மூடப்படும்

## அமெரிக்கா அறிவிப்பு

நியூயோர்க், ஓக.12
பாகிஸ்தான் மற்றும் ஏமனில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. அத்துடன் அந்த இரு நாடுகளுக்கும், அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

அரேபிய தீபகற்ப பகுதியில் இயங்கிவரும் அல்குவைதா அமைப்பின் அச்சுறுத்தல்கள் காரணமாகவே ஏமன் தலைநகர் சனாவில் உள்ள தூதரகத்தைத் தொடர்ந்து மூடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது என்று அமெரிக்க அரசின் செய்தித்தொடர்பாளர் ஜென்ப்ஸாகி தெரிவித்துள்ளார்.

அதேகாரணங்களுக்காகவே லாகூரில் உள்ள தூதரகமும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தீவிரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்க நாடுகளில் உள்ள தனது தூதரகங்களை கடந்த வாரத் தொடக்கத்தில் அமெரிக்கா மூடியது. அதில், ஜோர்டான், எகிப்து, ஓமன், லிபியா உள்ளிட்ட இடங்களில் மூடப்பட்டிருந்த அமெரிக்க தூதரகங்கள் மீண்டும் செயற்படத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



கலிபோர்னியாவின் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக ஆயிரக் கணக்கானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதுடன், தீயில் சிக்கி இரண்டு தீயணைப்பு வீரர்களும், சிவிலியன் ஒருவரும் காயமடைந்துள்ளனர். கட்டுப்பாட்டை மீறி பரவி வரும் இந்த தீயை அடுத்து ஆயிரத்து 500 பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்த தீ பரவியுள்ளது என்றும் தீயைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமான ஒரு விடமயாகக் காணப்படுகின்றது என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் சுமார் ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் இந்த தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ற)

# ஈபிள் கோபுரத்துக்கு தீவிரவாத அச்சுறுத்தல்

பாரிஸ், ஓக.12
தாக்குதல் நடத்தப்படும் என்று விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்து பிரான்ஸின் பிரபல்யம் மிக்க ஈபிள் கோபுரப் பகுதியில் இருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த மிரட்டலை அடுத்து கோபுரம் உள்ள பகுதிகளில் பொதுமக்களின் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

1889 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கோபுரம் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மிகவும் முக்கிய நினைவுச்சின்னமாக கருதப்படுகின்றது.

ஈபிள் கோபுரப் பகுதியை வருடாந்தம் 7 மில்லியன் சுற்றுலாப் பயணிகளும் குளிர்காலப் பகுதியில் நாளாந்தம் 30 ஆயிரம் பேர் பார்வையிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# விமான நிலைய தீ விபத்தில் பொலிஸார் கைவரிசை

## பாதுகாப்புக் கமராவில் சிக்கினர்

நைரோபி, ஓக.12
கென்யத் தலைநகர் நைரோபியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் ஒரு பகுதி கடந்த வாரம் இடம்பெற்ற தீ விபத்தில் முற்றாக நாசமடைந்தது.

பலமணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டபோதும், விமான நிலையத்தின் ஒரு பகுதி முற்றாக நாசமாகியுள்ளது.

தீயணைப்பு வீரர்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிக் கொண்டிருந்த போது விமான நிலைய ஊழியர்களும், பொலிஸாரும் வேறொரு காரியத்தில் கண்ணாக இருந்தமை தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தீ விபத்தை அடுத்து பயணிகள் அனைவரும் விமான நிலையத்தை விட்டு ஓடி விட்டனர். வெறிச்சோடிக் கிடந்த வருகையாளர் பகுதிகளில் நோட்டமிட்ட விமான நிலைய ஊழியர்களும், பொலிஸாரும் அங்கிருந்த வெளிநாட்டுப் பணிகளின் பயணப் பைகளில் இருந்த விலையுயர்ந்த பொருள்களைச் சுருட்டி விட்டனர். இந்தக் காட்சிகள் பாதுகாப்புக் கமராக்களில் பதிவாகி விட்டன.

அத்துடன் அங்கிருந்த ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்து பொலிஸாரே பணத்தை அள்ளிச் செல்லும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

அதையடுத்து உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



# ஈரான் மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை

## அங்குள்ள அரசியல் கைதிகள் விடுத்தனர்

தெஹ்ரான், ஓக.12
ஈரானுக்கு எதிராக அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை நீக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோள் ஈரானில் உள்ள 50க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளினால் விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு இவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த கடிதம் பிரிட்டன் காடியன் செய்தித் தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த பொருளாதார தடை, அதிக அளவில் ஈரானிய மக்களுக்கே பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி, ஜனாதிபதி மகமூட் அகமது நிஜாத்தின் நிர்வாகத்திற்கு எதிராக அமெரிக்கா பொருளாதார தடையினை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ரொகடென்டா எரிமலை வெடித்துச் சிதறியது

## 6 பேர் உயிரிழந்தனர்

ஜகார்த்தா, ஓக.12
இந்தோனேசியாவின் மத்திய பகுதியில் உள்ள ரொகடென்டா எரிமலை நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ரொகடென்டா எரிமலை குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் எரிமலையில் இருந்து 3 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு மக்கள் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் நேற்று முன்தினம் அதிகாலை எரிமலை குமுறத் தொடங்கியது. தொடர்ந்து 4 மணித்தியாலங்கள் தீப் பிழம்புகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. சுமார் ஆயிரத்து 500 மீற்றர் தூரம் தீப்பிழம்புகள் பரவி யுள்ளன என்று தெரிவிக் கப்படுகின்றது.

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள மெரபி எரிமலை 2010 ஆம் ஆண்டு வெடித்துச் சிதறியதில் 350க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருந்தனர். (ற)

# இறுவட்டு வெளியீடும் குருபூசை நிகழ்வும்

வடமராட்சி, ஓக.12

ஸ்ரீ ரமண மகரிஷியின் சீடரான குமாரு மயில் வாகனம் சுவாமிகளால் பாடப்பட்ட "அருணாசல அட்ஷரணமாலை" இறுவட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மயில்வாகனம் சுவாமிகளின் 28 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு காலை சந்நிதி முருகன் கோயிலில் அன்னாரின் நினைவாக விசேட அபிஷேகம், பூசைகள் இடம்பெறும்.

தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் குருபூசை தின நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் குரலில் பாடப்பட்ட அருணாசல அட்ஷரணமாலை, புராணமாலை இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படும்.

இதன் ஆய்வுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் க.கணேசமூர்த்தி நிகழ்த்துவார். இதன் பின்னர் சந்நிதிப் பெருந்திருவிழாவையொட்டி தினமும் இடம்பெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் "ஆறுமுகமானபொருள்" என்னும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரியர் குப்பிளான் ஐ.சண்முகலிங்கத்தின் சொற்பொழிவும் நடைபெறும். இறுதியில் அறுபத்துமூன்று நாயன் மாரின் குருபூசை இடம்பெறும். (ந-8)

## வரதராஜப் பெருமாளுக்கு பொன்னாலையில் கொடி

யாழ்ப்பாணம், ஓக.12

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு வரலட்சுமி பூசை இடம்பெறும்.

28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று முற்பகல் 11.30 மணிக்குத் தேர் உலாவும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு திருவடிநிலையில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் விசேட பூசைகள் இடம்பெறும். ஆலயத்தின்பிரதமகுருஸ்ரீவிஷ்ணுஸ்ரீக.ச. சோமாஸ் கந்தாச்சாரியார் தலைமையில் திருவிழாக் கிரியைகள் நடைபெறும். (ந-7-14)

## கைதடி தெற்கு ச.ச.நிலைய ஆண்டு விழா இன்று

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று சனசமூக நிலையத்தின் உப தலைவர் த.சுதாகர் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

நிலைய அங்கத்தவர்களுக்கான மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-288)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக.12

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அனுசரணையுடன், இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் ஆசி உரையை கலாநிதி ஆறு திருமுருகன் நிகழ்த்துவார்.

மங்கல இசையை வி.கே.பஞ்சமூர்த்தி வி.கே.பி.குமரன், ஆ.நர்மதன், என். பிரசன்னா ஆகியோர் வழங்குவார். (ந)

## தொடர் பேருரை

வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு நாள்கள் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

திருவிழா நாள்களில் தினமும் மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா "மகாபாரதம்" பற்றி சிறந்த பக்கவாத்தியம் சகிதம் தெய்வீகத் தொடர் பேருரை நிகழ்த்துவார். (ஒ)

**SEMINAR ON,**
**ICTAD PRICE FLUCTUATION FORMULA**

"நிர்மாணத்துறையில் விலை வேறுபாடு... இக்ராட் விலை சமன்பாட்டு பிரயோகமும் தீர்வுகளும்"

**Topics -**
- Basic Concepts of ICTAD Formula
- Application of the Formula with worked Example

**To Whom -**
- Engineers, Quantity Surveyor, Technical Officers, Contractors and relevant personnel in the Construction Industry--

**Seminar will be held end of the August, 2013, at**
**CCIY Conference Hall, No.124, Rasavinthoddam Road, Jaffna**

**Investment - Rs.1,300.00**

For Registration and further information,
please contact on 0212226609 before **23rd August, 2013** (சி/11124) (5.6.3)

**MA,Mcom., MBA, Msc., PG Diploma**
**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான(May மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ். இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரியில் நடைபெறுகின்றன.
- MA இல் பொருளியல்,வரலாறு, அரசியல் விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம்,பொது நிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும், Journalism and Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- MCom. இல் வங்கியியல்,வர்த்தகம், கூட்டுறவு ஆகியவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.
- PG Diploma ஒருவருட கற்கை நெறியாக Management, Marketing Management, Hospital Management, Public Relation Management,Computer Application ஆகியவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

முக்கியகுறிப்பு:

1) இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
2) பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

யாழ். இணைப்பாளர்,
மதுரை, காமராசர் பல்கலைக்கழகம்.
தொ.பே: 021 222 8148, 077 846 9721 (சி/10788)(5-6-3)

புதிய உயர்கல்லூரி,
95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)**

**பாவித்த பொருள்கள் ஏலவிற்பனை**

| | |
|---|---|
| பற்றறிகள் | 07 |
| றேடியேற்றர் கோர் | 05 |
| லான்மாஸ்ரர் ரயர் | 02 |
| லான்மாஸ்ரர் ரியூப் | 02 |
| 1000-20 | 02 ரயர் |
| 900-20 | 01 ரயர் |
| 825-20 | 01 ரயர் |

மேற்படி பொருள்கள் 16.08.2013ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு சங்கானை ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயத்தில் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்
(C/11120)(7.6.3)

**தவறிவிட்டது**

கைதடி மந்தி குமர்நகரைச் சேர்ந்த துரைராசா பிரகாஷ் என்பவரது தேசிய அடையாள அட்டை (883184262V), காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் (தற்காலிகம்) ஆகியன அடங்கிய பேர்ஸ் கடந்த (09.08.2013) அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 075 043 1504 (31322) (7.6.3)

**தேவை**

தரமான இளம் ஓலைச் சார்வுகள் தேவை.
தொடர்பு: (C/11126)(7.6.3)
அன்னா பாம், இணுவில்.

**காணி விற்பனை**

உரும்பிராய் கிழக்கில், கோப்பாய்- உரும்பிராய் பிரதான வீதியில் உள்ள வீடு, கடை கட்டுவதற்கு உகந்த நல்ல சூழலில் 4 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. (31249)(7.6.3)
(தரகர் தேவையில்லை) தொடர்பு: 075 511 8362


DELL 3 வருட உத்தரவாதத்துடன் Laptops, Desktops
1. Dell Vostro 2421: Intel Corei3 - 3337U. 4GB,500GB,14.0"-3Yrs
2. Dell Inspiron 3521: Intel Corei3-3217U. 4GB,500GB,15.6"-1Yrs
3. Dell Inspiron 3521: Intel Core i5-3337U. 4GB,750GB,15.6"-1Yrs

வடமாகாணத்திற்கான ஏகமுகவர்கள்
STP Your Partner in IT Solutions
49, 1st Cross Street. Jaffna. T.P:0212228147. (சி/11132)

உங்கள் முகம்,மேனி பளபளக்க வேண்டுமா? எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாற வேண்டுமா?
இன்றே பாவியுங்கள்.

**'றோயல் ஒலிவ் ஒயில்'**
**(Product of Spain)**

ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்




Re Packed By:
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-12.
T.P.: 077 727 7670 (சி/1145)(5.6.3)

அனைத்துப் பாமசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

**கட்டடத் திருத்தத்திற்கான கூறுவிலை கோரல்**

சங்கத்திற்கு சொந்தமான பலாலி வீதி திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள கட்டடத் திருத்தத்திற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. அதன் வேலை விவரத்தைப் பார்வையிட்டு காரியாலயத்தில் அதற்கான பத்திரத்தைப் பெற்று கூறுவிலையை 24.08.2013ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்
நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
தொ.பே : 021 222 2143 (C/11120)(7.6.3)

**குறைந்த விலையில் சொகுசான பயணம்**

கொழும்பு - சென்னை - கொழும்பு
சேவை Rs. 14,900/- upwards
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்



கொழும்பு/சென்னை/திருச்சி/சென்னை/கொழும்பு
**Rs. 20,700 upwards & Stopover allowed in Chennai**
கொழும்பு/சென்னை/மும்பாய்/சென்னை/கொழும்பு
**Rs. 28,600 upwards & Stopover allowed in Chennai**

- ✓ Baggage allowance 37 kgs.
- ✓ Complementary Meals provided
- ✓ Groups fares offer only over 10 passengers.

AIR-INDIA express (சி/10880)
Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna. Ph: 021 2221878, 0777730818

**நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

**வெற்றுச்சாக்கு/வெற்றுப்பை விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தில் வெற்றுசாக்கு வெற்றுப்பை என்பன விற்பனைக்குண்டு.

தேவைப்படுவோர் அதனைப் பார்வையிட்டு அதற்கான கூறுவிலைகளை 24.08.2013 ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
தொ.பே : 021 222 2143 (C/11119)(7.6.3)

# சட்டவிதிமுறைகளை மீறும் மானியங்கள் ஆணைக்குழு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.12

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது சட்டவிதிமுறைகளை கவனத்தில் கொள்ளாது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயற்படுகிறது. இதனால் கஷ்டப்பிரதேச மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதில் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு இலங்கை ஆசிரியர்சங்கம்குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பில் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்திருப்பதா வது:

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் 16 மாவட்டங்கள் கஷ்டப் பிரதேசமாக கருதப்பட்டு கோட்டா முறையில் மாணவர்கள் பல்கலைக்கழங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த முறையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மாணவர்கள் பலர் தமது வசிப்பிடத்தை மாற்றி ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு கஷ்டப் பிரதேசத்தில் தோற்றுகின்றனர்.

அதாவது கஷ்டப் பிரதேசம் அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் கஷ்டப் பிரதேசமான மாவட்டமாகக் கருதப்படும் 16 மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்துக்குச் சென்று வதிவிடத்தைகாரணமாகக் கொண்டு பரீட்சை எழுதிவிட்டு தமது மாவட்டங்களுக்குச் சென்றுவிடுகின்றனர்.

இதனால் கஷ்டப் பிரதேச மாவட்ட மாணவர்கள் பிற மாவட்ட மாணவர்களின் வருகையால் பல்கலைக்கழங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான சந்தர்ப்பத்தை இழக்கின்றனர்.

பிறமாவட்டங்களில் உயர்தரப் பரீட்சையில் தகுந்த சித்தியைப்பெற முடியாதவர்களே கஷ்டப் பிரதேச மாவட்டங்களுக்குச் சென்று வதிவிடத்தை அடிப்படையாகக் காட்டி அத்தகைய மாவட்டங்களில் உயர்தரப் பரீட்சையை எழுதமுண்டியடிக்கின்றமை தெரிய வந்துள்ளது.

அரசியல் செல்வாக்கு, உயர் அதிகாரிகளின் செல்வாக்கு மற்றும் பணபலத்தைப் பயன்படுத்தி இவ்வாறு கஷ்டப் பிரதேச மாவட்டங்களுக்கு வதிவிடம்பெற்றுச்சென்று உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஏனைய மாவட்டங்களை விட வடக்கு கிழக்கு மாவட்டங்களிலேயே இந்த நிலை அதிகமாக உள்ளது.

2009இல் மெனிக்பாம் முகாமில் உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்களைப் பதிவு செய்யும் முறையின் போதே பிற மாவட்ட மாணவர்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு மாணவர்கள் மாவட்டம் மாறி பரீட்சை எழுதியிருந்தும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டவிதிமுறைகளை மீறி வதிவிடத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் பல்கலைக்கழக அனுமதியை வழங்குகின்றனர்.

சட்ட விதிமுறைகளின்படி மாணவர் கடைசியான ஐந்து வருடத்தில் மூன்று வருடங்களைக் கற்ற பாடசாலையையே அவரது மாவட்டமாகக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகத் தெரிவு இடம் பெற வேண்டும். இவ்வாறு வெளி மாவட்ட மாணவர்களால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்–என்றார். (ஜ-4)

# டக்ளஸ் கலந்துகொள்ளவிருந்த நிகழ்வு மக்களால் புறக்கணிப்பு

## இடைவழியில் திரும்பினார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 12

அச்சுவேலி செல்வவிநாயகர்புரம் குடியேற்றத் திட்டத்துக்கு மின்சார மீள் விநியோக ஆரம்ப நிகழ்வை பொதுமக்கள் புறக்கணித்தமையால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடைவழியில் திரும்பிச் சென்றார். எனவே விமரிசையாக இடம் பெறவிருந்த இந்த நிகழ்வு மிகச் சாதாரணமாக நடைபெற்றது.

> குறித்த குடியேற்றத் திட்டத்தின் பெயரை 'தேவாபுரம்' எனப் பெயர் மாற்றம் செய்தால் சகல உதவிகளும் வழங்கப்படும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்த போதிலும் பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

தந்தைய செல்வாவின் பெயரால் உள்ளூராட்சி உதவி அமைச்சராக மு.திருச்செல்வர் கியூசி, ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டம் போரால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் செல்வ விநாயகபுரம் மக்களின் கோரிக்கைகள் எவையும் உரிய முறையில் நிறைவேற்றப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வந்தன.

குறித்த குடியேற்றத் திட்டத்தின் பெயரை 'தேவாபுரம்' எனப் பெயர் மாற்றம் செய்தால் சகல உதவிகளும் வழங்கப்படும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தபோதிலும் பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

தற்போது மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து மின்சார விநியோகத்துக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொது மக்கள் நிகழ்வைப் புறக்கணித்தனர். வாக்குகளுக்காக மட்டும் அரசியல்வாதிகள் சேவை செய்யக்கூடாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் உரையாற்றும்போது பகிரங்கமாக மக்கள் சமூகமளிக்காமல் புறக்கணித்தமைக்கு கண்டனம் தெரிவித்ததோடு குறித்த ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் இதற்குக் காரணம் என்றும் தெரிவித்தார். இந்த நிகழ்வையே பொது மக்கள் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தனர்.

இலங்கை மின்சார சபை அதிகாரிகள் உட்பட சிறப்பு அழைப்பாளர் என்ற வகையில் இரட்டை இலக்கத் தொகையில் சிலர் மட்டும் கலந்து கொண்டனர். (வ-11)

## ஆலயச் சூழலில் வீசப்படும் கழிவுகளால் சீர்கேடு



ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயச் சுற் றாடலில் வீசப்படும் கழிவுப் பொருள்களை விலங்குகள் மற்றும் பறவைகள் இழுத்துச் செல்வதாகவும் அதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். கழிவுகளை அகற்றுவதற்கு ாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதோடு ஆலயச் சூழலில் இவ்வாறு கழிவுப் பொருள்களை கொட்ட வேண்டாம் எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (வ-17)

## பௌசர் கடலில் மூழ்கியதால் படகுகளை நிறுத்துவதில் சிரமம்

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ். குடாநாட்டில் நேற்றுமுன்தினம் காலை பெய்த கனத்த மழையால் வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெயில் எறித்து வந்ததால் நிலக்கீழ் நிரைப் பயன்படுத்தி விவசாயிகள் வெங் காயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். பயிர்கள் நல்ல நிலையில் காணப்பட்டன.

எனினும் நேற்றுமுன்தினம் காலை எதிர்பாராது பெய்த மழையால் வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டன என்று விவசாயிகள் கூறுகின்றனர். வலி.கிழக்கு மற்றும் வலி. மேற்கு பகுதியில் விவசாயிகள் கூடுதலாக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். (வ-17)

# சனசமூக நிலையங்களின் ஊடாக கிராமங்களை மேம்படுத்துவோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கருத்து

யாழ்ப்பாணம், ஓக.12

ஒவ்வொரு கிராமத்தினதும் வளர்ச்சியில் பங்காற்றக்கூடிய சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்து அதனூடாக கிராம முன்னேற்றத்துக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



கொக்குவில்வளர்மதிமுன்னேற்றக் கழகம் மற்றும் சனசமூக நிலையத்தினதும் பொன்விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதம்பிள்ளை மண்டபத்திலும் நடைபெற்றது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் தலைவர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாகஅவர்தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது:

போர்ச் சூழலால் பல இடங்களில் சனசமூக நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. எனினும் கொக்குவில் சனசமூக நிலையம் தனது சேவையில் 50 வருட நிறைவைக் கண்டுள்ளது. இதற்குக் கழகத்தின் இடைவிடாத சேவை மற்றும் உறுப் பினர்களின் விடாமுயற்சியே காரணம்.

ஒவ்வொரு கிராமத்தினதும் வளர்ச்சியில் சனசமூக நிலையங்கள் பெரும் பங்காற்றுகின்றன. இதனூடாக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது நன்மை தரும். அந்த வகையில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் மிகத் திறமையான சேவையை வழங்கி வருகின்றனர். இதற்கான முயற்சிக்கு எனது பங்களிப்பையும் வழங்கத் தயாராகவுள்ளேன் – என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் கு.சுரேஸ்குமார் தம்பதியர் கொக்குவில் வளர்மதி நிறுவக உறுப்பினர் எஸ்.குகனேந்திரன், பி.ஜெகநாதன், எஸ்.சிதம்பரநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளும் உதவித் தொகை கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவற்றைக் கையளித்தார்.(வ-14-21)

# 67.7 மில்லியன் செலவில் புனரமைக்கப்படும் 3 வீதிகள்



யாழ்ப்பாணம், ஓக. 12

சாவகச்சேரி பிரதேச சபையால் நெல்சிப் திட்டத்தின் கீழ் 67.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 3 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று சாவகச் சேரி பிரதேச சபைத் தவி சாளர் துரைராசா தெரிவித் தார்.


2013 ஆம் ஆண்டு சபையால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்களின்படி நெல்சிப் திட்டத்தின் கீழ் 3 வீதிகள் புனரமைப்புச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நவபுரம் மட்டுவில் வீதி, சரசாலை ஐயனார் வீதி, மந்துவில் குடியிருப்பு வீதிஎன்பனபுனரமைப்புச்செய்யப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தகாரர் கள் தெரிவு செய்யப்பட்டதையடுத்து புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

## முஸ்லிம் அமைச்சர்களே அரசிலிருந்து விலகுங்கள்

### ஜெமீல் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஓக.12
பேரினவாத சக்திகள் தொடர்ச்சியாக பள்ளிவாசல்களைத் தாக்கி முஸ்லிம்கள் மீது காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட்டுள்ள போதிலும் அரசு அவற்றைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காமல் அலட்சியம் காட்டி வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் தமது அமைச்சுப் பதவிகளை தூக்கி எறிந்து விட்டு எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வர வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம். ஜெமீல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறினார். இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
தம்புள்ளை பள்ளிவாசல் தொடக்கம் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் வரை நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களும் மதரசாக்களும் தாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மஹியங்கனை பள்ளிவாசல் உட்பட பல பள்ளிவாசல்களும் மதரசாக்களும் பலாத்காரமாக மூடப்பட்டிருக்கின்றன.
இதன் காரணமாக இலங்கை முஸ்லிம் மக்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டு நிம்மதியிழந்து பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.
இந்நிலையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் சமூக நோக்குடன் சிந்தித்து அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும். முஸ்லிம் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு ஒற்றுமையுடன் சமூக அரசியல் பணியை முன்னெடுப்பதற்கு முன்வர வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெள்ளிக்கிழமை பட்டம் விடும் போட்டி சாய்ந்தமருது கடற்கரை பௌலி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (ச-10)

## செங்கலடியில் சைக்கிள் திருடிய நபர் கைது

மட்டக்களப்பு,ஓக.12
மட்டக்களப்பு, செங்கலடியில் இடம்பெற்றுவரும் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
செங்கலடி நகர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றையே இந்த நபர் திருடினார் என்று சந்தேகத்தில் சைக்கிளின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.
சைக்கிளை பறிகொடுத்தவர்களே திருட்டு சந்தேக நபரைப் பிடித்து வந்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். அவரை ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கலகலப்பின்றி முடிந்தது பெருநாள் கொண்டாட்டம்

### கிழக்கு மாகாணத்துக்கு தனிப்பிறை குழுவை நியமியுங்கள் என்கிறது உலமா கவுன்சில்



மட்டக்களப்பு, ஓக.12
கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்த பெருநாள் கலகலப்பின்றி இரு நாள்கள் கொண்டாடப்பட்டது.
எனவே எதிர்காலத்தில் கிழக்குக்கென தனிப் பிறைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.
இவ்வாறு அகில இலங்கை உலமா கவுன்சில் வேண்டுகோள் விடுத்துள்ளது.
முஸ்லிம் மக்களின் மிக முக்கிய பெருநாளான நோன்புப் பெருநாளை தீர்மானிப்பதில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா வின் அக்கறையின்மை கண்டிக்கத்தக்கது என்று உலமா கவுன்சில் குற்றம் சாட்டியுள்ளது.
இது குறித்து உலமா கவுன்சில் தலைவர் அப்துல் மஜீத் தெரிவித்ததாவது;
கிண்ணியாவில் பிறை தென்பட்டது என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மறு நாள் நோன்பு பிடிக்கக் கூறியமை குர்-ஆன் ஹதீத்துக்கு முரணானது. பிறை பற்றிய மாற்றுக் கருத்துக்களை யாரும் முன் வைக்க வில்லை என்ற ரிஸ்வி முப்தியின் கருத்தினை நாம் மறுக்கிறோம்.

எதிர்காலத்தில் கிழக்கில் பிறை காணத் தனிக் குழு நியமிக்க வேண்டும்.

பிறை பற்றிய கருத்தாடல்களில் ஜம்மியதுல் உலமா எம்மை அழைப்பதில்லை. பிறை குறித்து இன்னொரு மாநாடு நடைபெற்றால் எமது கருத்துக்களை நிரூபிக்க நாம் தயார்.
எனவே எதிர்காலத்தில் கிழக்குக்கு பிறைக்கு தனிக் குழு நியமிக்க வேண்டும் என்றார். (ச-10)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட நால்வர் மாட்டினர்

மட்டக்களப்பு,ஓக.12
மட்டக்களப்பு,ஏறாவூர் நகரில் சூதாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தநபர்கள் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.



பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த இடத்துக்கு சென்ற போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச)



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமான கல்முனையில் சனிக்கிழமை அதிகாலை முதல் அதிகளவான சூடை மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. (ச-10)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு திறன் அபிவிருத்திப் பயிற்சி

மட்டக்களப்பு,ஓக.12
மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களில் இதுவரை திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை நிறைவு செய்யாத 106 பேருக்கான பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 18ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது என்று மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின், 2013ஆம் இலக்க கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்தப் பயிற்சி மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
அமைச்சின் கீழ் இணைக்கப்பட்ட 457 பட்டதாரி பயிலுநர்களிலிருந்து சுய விருப்பத்தின் அடிப்படையில் 370 பேர் திறன் அபிவிருத்தி பயிற்சி திட்டத்துக்காக எம்பிலிபிட்டிய, மாதுறு ஓயா, மின்னேரியா, சீனன்குடா ஆகிய நான்கு பயிற்சி நிலையங்களில் 2 வார கால பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சி நெறியிலிருந்து கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுடைய தாய்மார்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டவர்கள் ஆகிய காரணங்களுக்காக ஒரு தொகை பட்டதாரி பயிலுநர்களுக்கு கலந்து கொள்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.
இவர்களுக்கே இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை பயிற்சிகள் நடைபெறவுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார். (ச)

## காத்தான்குடியில் மிதக்கும் உணவகம்


காத்தான்குடி,ஓக. 12
கிண்ணியாவிலிருந்து காத்தான்குடிப் பிரதேசத்துக்கு கொண்டு வரப்பட்ட படகுப் பாதை திருத்தி அமைக்கப்பட்டு மிதக்கும் உணவகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
இந்த உணவகத்தை வெள்ளிக்கிழமை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன் காத்தான்குடி ஆற்றங்கரையில் இருந்து ஆரம்பித்த முதல் பயணத்திலும் அவர் கலந்து கொண்டார்.



பிரதியமைச்சருக்கு உணவு பரிமாறப்படுகிறது.

'முற்றிலும் வித்தியாசம். முற்றிலும் இன்பம்' என்ற தொனிப்பொருளில் நிறுவப்பட்டுள்ள உணவகத்தில் பல வித்தியாசமான உணவுகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.
இந்த உணவகம் தினமும் பிற்பகல் 4 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை இயங்கவுள்ளது.
இதற்கான பூரண பாதுகாப்பை கடற்படையினர் வழங்குவர் என்று காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார். (ச-10-32)

# வெலிவேரிய பகுதியில் நீரில் நச்சுத்தன்மை



கொழும்பு,ஓக.12
வெலிவேரிய தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள நீர் மற்றும் மண்ணில் நச்சுப் பதார்த்தம் உள்ளடங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பிரதேச நீர் மற்றும் மண் புவியியல் மற்றும் கனிமவள ஆய்வு மையத்தினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
இந்த நீர் மற்றும் மண் வகைகளில் ஒரு வகை நச்சுப் பதார்த்தம் காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
தொழிற்சாலையை அண்டிய 25 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், தொழிற்சாலைக்கு வெளியில் 35 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.
மண் மற்றும் நீரில் அமிலத்தின் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது என்று புவியியல் மற்றும் கனிமவள ஆய்வு மையத்தின் தலைவர் செனரத் ஜயசுந்தர தெரிவித்தார். (ச)

# மூன்றாண்டு முடியும் வரை இடமாற்றம் வழங்க இயலாது

## பட்டதாரிகள் நியமனம் குறித்து விளக்கமளிக்கிறார் செனவிரத்ன



கொழும்பு,ஓக. 12
நிரந்தர நியமனங்களைப் பெற்றுள்ள அதிகளவான பட்டதாரிகள் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட பின்னர் தமது இருப்பிடத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காரணம் காட்டி, இடமாற்றங்களைக் கோரி நிற்கின்றனர். எனினும் நிரந்தர நியமனங்களைப் பெற்றுள்ள எந்தவொரு பட்டதாரிக்கும் மூன்றாண்டுகள் சேவைக் காலம் கடக்கும் வரை இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.
இவ்வாறு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சர் டபிள்யூ டி.கே.செனவிரத்ன தெரிவித்தார்.

> ” இடமாற்றங்கள் தொடர்பாக அதிக காலத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது .

இவ்வாறான இடமாற்றங்களை வழங்குவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது.
அரச சேவையில் இவ்வாறு இடமாற்றங்கள் வழங்கப்படுவதால் ஒட்டு மொத்த அரச கட்டமைப்பும் சிக்கலுக்கு உள்ளாகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
நிர்வாக சேவைகள் அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய கருமங்களை நிறுத்திவிட்டு இடமாற்றங்கள் தொடர்பாக அதிக காலத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ச-22)

# இரத்தினபுரியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஓக.12
இரத்தினபுரி நகரப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சாலியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் (வயது-29) ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
இவரிடமிருந்து ஒரு கிலோ 500 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.
சந்தேகநபர் சனிக்கிழமை இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான்



உத்தரவிட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பொலித்தீனுக்குப் பதிலாக மாற்றுப்பை வழங்குங்கள்

## புடைவைக் கடைகளுக்கு ஆலோசனை



கொழும்பு,ஓக. 12
உடு புடைவைகள் மற்றும் தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் புடைவை விற்பனை நிலையங்களில் நுகர்வோருக்கு அவற்றைப் பொலித்தீன் பைகளில் இட்டு வழங்கக்கூடாது. அவற்றுக்குப் பதிலாக கடதாசி அல்லது துணிப்பைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை புடைவைக் கடைகளின் உரிமையாளர்களுக்கு கோரிக்கை விடுக்கவுள்ளது.
விற்பனை நிலையங்களை நடத்திச் செல்லும் அவற்றின் உரிமையாளர்களை சுற்றாடல் அதிகார சபைக்கு வரவழைத்து அவர்களிடம் இந்தக் கோரிக்கைமுன் வைக்கப்படவுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் சாரங்க அழகப்பெரும தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மூன்று மாத காலத்துக்குள் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக மாற்றுப் பாவனையொன்றை ஆரம்பிக்குமாறு அவர்களிடம் கேட்கப்படவுள்ளது.
சட்டங்கள் மூலமாக வர்த்தகர்களைப் பலவந்தப்படுத்துவதை விட இலகுவாக இவ்வாறு கோரிக்கைகளை விடுத்து அறிவூட்டுவதன் மூலம் ஊக்குவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-22)

# கைகலப்பில் ஈடுபட்ட பொலிஸார் வைத்தியசாலையில்

கொழும்பு,ஓக.12
புத்தளம், கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையத்தில் கைகலப்பில் ஈடுபட்ட இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் காய மடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்களின் நிலைமை ஆபத்தானதாக இல்லை என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.
ஆயிரம் ரூபா பணப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு இரண்டு பொலிஸாரும் மதுபோதையில் இருந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைகளை நடத்தி வருகிறார். (ச)



கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சனிக்கிழமை இடம்பெற்றபோது பஞ்சரத பவனி காலி வீதி வழியாக வருகின்றது.

# பெண்ணின் பணப்பை அபகரிப்பு

கொழும்பு,ஓக.12
அநுராதபுரம் புனித நகரில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண்ணின் பணப் பையை கொள்ளையர் குழு அபகரித்துள்ளது.
இந்தப் பெண் தமது நண்பியுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அவரது பணப்பை அபகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
திருடப்பட்ட பணப்பையில் எட்டு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடன் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் பொருள்கள் இருந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. (ச)

# சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே இந்திய மீனவர்களுக்கு நடவடிக்கை



கொழும்பு,ஓக.12
அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கு எதிராக நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
உள்நாட்டு சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நெகிழ்வுத்தன்மையைப் பின்பற்ற முடியாது என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.
இந்திய மீனவர்களை விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு, இந்தியாவுக்கான இலங்கை தூதரகத்திடம் கோரியிருந்தது.
இந்தக் கோரிக்கை இராஜதந்திர ரீதியாக விடுக்கப்பட்டிருந்தது.
எனினும் இந்திய மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பில் விசேட சலுகைகள் காண்பிக்க முடியாது என்று கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்,
உள்நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# விசம் உள்ளடங்கிய உணவுகளை பல்தேசிய நிறுவனங்கள் தயாரிப்பு

## சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு



கொழும்பு,ஓக.12
பல்தேசிய நிறுவனங்கள் விசம் உள்ளடங்கிய உணவு வகைகளையும், அதனால் ஏற்படக் கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய மருந்துப் பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன.
உணவுப் பொருள்களில் உள்ளடக்கியுள்ள விச இரசாயனங்களினால் ஏற்படக் கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய மருந்து வகைகள் தயாரிக்கப்பட்டு இலங்கைக்கு விநியோகம் செய்யப்படுகின்றன என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
உணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் பல்தேசிய நிறுவனங்கள் கிருமிநாசினிகள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன.
அதனால், நாட்டில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை பரிசோதனை செய்ய அதி நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வுகூடம் அவசியமாகும். இந்த ஆய்வுகூடம் பொரளை பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ளது என்று அவர் கூறினார்.
உலக சுகாதார ஸ்தாபனத்துடன் பேச்சு நடத்தி அதன் ஒத்துழைப்புடன் அதி நவீன ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீவிரவாதம் தலைதூக்க அடியெடுத்து கொடுக்கும் போக்குத் தேவை தானா?

முஸ்லிம் மக்கள் - இஸ்லாம் மதத்தவர்கள் - புனித நோன்பு காலத்தை மகத்துவத்துக்குரிய ஒன்றாகக் கொண்டு அனுஷ்டிப்பவர்கள். அதனை நன்கு தெரிந்திருந்தும், புரிந்திருந்தும் இவ்வருடம் புனித நோன்பின் முதல் நாளன்றும், நோன்பு முடிவடைந்து பெருநாள் களைகட்டிய நாளன்றும் அவர்களின் மதஸ்தலங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளன.

நோன்பு ஆரம்பித்த நாளன்று மகியங்கனை பள்ளிவாசல் மீது, முஸ்லிம் மக்களால் வெறுத்து ஒதுக்கப்படும் பன்றி இறைச்சி வீசப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டது.

அதே போன்று நோன்பு முடிவடைந்து, பெருநாள் களை கட்டியிருந்த வேளை, கொழும்பு கிரான்ட்பாஸ் பள்ளிவாசலில் மஃரிப் தொழுகையின்போது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கிரான்ட்பாஸ் தாக்குதல் முஸ்லிம் மக்கள் மனங்களில் கூரிய வடுவை உண்டாக்கி உள்ளது. ஆழ்ந்த கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

நோன்புப் பெருநாளுக்கு அடுத்தநாள் இடம்பெற்ற சம்பவத்தில், கிரான்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதி மஸ்ஜிதுல் தீனுல் இஸ்லாம் பள்ளி மீது காடையர்கள் நடத்திய தாக்குதலில், பள்ளிவாசல் கண்ணாடிகள் உடைந்தன. கல்வீச்சின்போது இரு பொலிஸார் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர். பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள முஸ்லிம் மக்களின் வீடுகள் மீதும் கல்வீசப்பட்டது.

இச்சம்பவத்தின் போது பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் என்று பெரும் படையணி ஒன்று கிராண்ட்பாஸில் இறக்கப்பட்டபோதிலும், தாக்குதல் நடத்திய வன்முறையாளர் எவராவது கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. தாக்குதல் நடத்தியவர்கள் சுதந்திரமாக அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டனர்.

பழைய பள்ளிவாசல் இருந்த இடத்தில் மத விவகார அமைச்சின் அனுமதிபெற்றே புதிய பள்ளிவாசல் கட்டப்பட்டதென்றும், இதனைத் திறக்கக்கூடாது என்று பௌத்த தேரர்களும் இனவாதிகளும் சமீப காலமாக பிரச்சினை எழுப்பி வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறிருந்த போதிலும், பள்ளிவாசல் குறித்த பேச்சுகளில் முஸ்லிம்கள் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறிருக்க, நோன்பு நாளில் முஸ்லிம்களை ஆத்திரமூட்டும் வகையில் வேண்டுமென்று இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வெலிவேரிய சம்பவத்துக்குப் பொதுமக்களிடம் மன்னிப்புக்கேட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், பள்ளிவாசல் தாக்குதலுக்கு என்ன செய்யப்போகிறார்? வெளிமாவட்டக் கிராமம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது மூடி மறைக்கப்பட்டிருக்கும். மறுப்பு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கும் அல்லவா? தலைநகரின் மத்தியில் பள்ளிவாசல் தாக்கப்பட்டதால் அதனை மூடிமறைக்க முடியாதே.

வெலிவேரியாவில் மக்கள் தண்ணீர் கேட்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தபோது பெரும் யுத்தம் ஒன்றுக்குத் தயாராவது போன்று இராணுவம் அங்கு தருவிக்கப்பட்டது. மனிதாபிமான கோரிக்கையை முன்வைத்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம், ஆர்ப்பாட்டத்தை அடக்க முதலில் கைக்கொள்ள வேண்டிய எத்தனையோ வழிமுறைகள் இருந்தபோதிலும், அவற்றைக் கடைப்பிடியாது துப்பாக்கிச்சூடு நடத்தியும் தடியடி நடத்தியும் மிகவும் மோசமான அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது.

ஒரு சிறிய விதையை உடைப்பதற்கு பெரும் மலைப் பாறையை உடைக்கும் கடப்பாரை பயன்படுத்தப்பட்டது போன்று, இராணுவம் நடந்துகொண்டதாகக் குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அது அடங்குவதற்கு முன் நேற்றுமுன்தினம் கொழும்பு கிரான்ட்பாஸில் மற்றொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிரான்ட்பாஸில் பொலிஸாரும் படையினரும் நடந்து கொண்ட விதம், பலரையும் சிந்திக்கவைத்துள்ளது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய நிராயுதபாணிகளான மக்கள் மீது வெலிவேரியாவில் தாக்குதல் நடத்திய அரசின் அங்கங்கள் கிராண்ட்பாஸில் பள்ளிவாசல் தாக்கப்பட்டபோது பிக்குகள் தலைமையிலான காடையர்களை அடக்கப் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை. அது ஏனோ?

ஒரு பௌத்த விகாரையைக்கூட விட்டுவைக்காது எல்லாவற்றுக்கும் ஒரு சீரான ஒழுங்குமுறையில் சென்று வழிபட்டு வருகிறார் நாட்டின் ஜனாதிபதி. அவற்றின் குறைகளைக் கண்டறிந்து தீர்த்து வருகிறார்.

ஆனால் முஸ்லிம்களுக்கு மட்டும் அவர்கள் வாழும் இடங்களில் அவர்களது சொந்தப் பணத்தில் ஒரு பள்ளிவாசலை நிர்மாணித்து அதில் வழிபாடுகளை நடத்த இந்த நாட்டில் உரிமை மறுக்கப்படுகிறது.

பௌத்த குருமார் அடங்கிய கும்பல்கள் சட்டத்தை அப்பட்டமாக மீறுகின்றன. சட்டம், ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கிறார்கள்.

கிரான்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல் பின்னணியில் யார் செயற்பட்டார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களது பதவி அந்தஸ்தைப் பொருட்படுத்தாது அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி அரசு தனது நம்பகத்தன்மையை வெளிக்காட்ட வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான, அவர்களது வணக்க ஸ்தலங்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த அரசு தவறுமானால், அது, முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் உருவாக வழிவகுக்கும் என்பதனை, அரச கட்டிலில் உள்ளவர்கள் எப்போது உணரப்போகிறார்கள்?

# அரசின் கவலைகளை மேலும் அதிகரித்துள்ள சம்பவங்கள்

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

■ கோகுலன்

மனித உரிமைகள் மற்றும் வழிப்பாட்டு சுதந்திரங்கள் இலங்கை அரசமைப்பினால் உறுதிபடுத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பாகத்தான் அரசுக்கு இப்போது பிரச்சினைகள் மிகப் பிந்திய நிலையில் தோன்றியுள்ளன. முந்திய விடயத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அடங்கியிருந்த போதிலும் வெலிவேரிய என்ற இடத்தில் கடந்த வாரம் ராணுவம் மக்கள் மீது துப்பாக்கிளால் சுட்ட விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அது தொடர்பான சாட்சியங்கள் அதிகமதிகமாக வெளிவந்து கொண்டிருக்கும் அதேநேரம் அச்சம்பவத்தின் பாரதூரமான தன்மையும் வெகுதூர விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பக்கவிளைவுகளும் தெளிவாகிக் கொண்டிருக்கின்றன.

வெலிவேரியாவில் உள்ள சென். அந்தனிஸ் தேவாலயத்துக்குள் ராணுவம் புகுந்தமையானது கொழும்புப் பேராயர் வண.மல்கொம் கார்தினால் ரஞ்சித் உட்பட கத்தோலிக்க சமூகம் கோபமடைந்துள்ளனர். ஆண்டகை விடுத்த ஓர் அறிக்கையில் பின்வரும் கருத்து காணப்பட்டது.

''ஆயுதங்களுடன் எவரும் அவ்வாறு புனிதமான இடத்துக்குள் நுழைவதும், வன்முறையாக நடந்து கொள்வதும் தேவ நிந்தனையாகும்.''

இந்தக் கருத்து இப்போது நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்கள் மத்தியில் மாத்திரமல்ல உலகின் முக்கிய நகரங்களில் உள்ள கத்தோலிக்க சமூகங்கள் மத்தியிலும் தேவாலயங்களிலும எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பது:-

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒருவர் தன் கைகளில் சட்டத்தை எடுத்துக் கொள்வதையோ மக்களின் சாதாரண வாழ்வை குழப்புவதையோ அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் அவை கைமீறிப் போனாலும் கூட தனது அதிகாரங்களை ஒடுக்குமுறையில் பிரயோகிப்பதையோ நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கான நல்லமுறை எதுவென்றால் அமைதி முறையிலான விவாதமும் உரையாடல்களுமே என்று அவர் தெரிவித்துள்ளார்.

**முஸ்லிம் எம்.பிக்களின் கலந்துரையாடல்**

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்து பள்ளிவாசல்கள் தாக்குதலுக்குள்ளானமை மற்றும் ஒரு பள்ளிவாசலில் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அங்கு பன்றி இறைச்சி வீசப்பட்டதாகக் கூறப்படுவது தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள்.

இந்த இரண்டாவது விடயம் தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்று அங்கு பேசியவர்கள் குற்றஞ் சாட்டினார்கள். அதுமட்டுமல்ல அந்த இடத்துக்கு உரிமையாளராக இருப்பவர் அங்கு பள்ளிவாசல் எதுவும் இருக்கவே இல்லை என்பதாக சத்தியக் கடதாசியில் கையெழுத்திடும்படி வற்புறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கையெழுத்திடாவிட்டால் அவர் அந்த இடத்தில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார் என்றும் எச்சரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரங்களையெல்லாம் விவாதிப்பதற்கு ஜனாதிபதியுடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியிடம் விடப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் வரை அவர்களுக்கு சந்திப்புக்கான நேரம் காலம் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லையென்று தெரிய வந்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நிறுவன மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக முஸ்லிம்களின் செல்வாக்குள்ள ஒரு பிரிவினர் முழு அளவிலான அறிக்கையொன்றை தயாரித்து வருவதாக அறிய வந்துள்ளது. ஐ.நா வுடன் இணைப்பைக் கொண்டுள்ள மிகப் பெரிய சர்வதேச நிறுவனமாகும் இது. சம்பந்தப்பட்டவர்கள் பகிரங்கமாக தம்மை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நிறுவனத்தின் உறுப்பு நாடுகளின் வருடாந்த வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நியூயோர்க்கில் ஐ.நா.வில் செப்ரெம்பரில் நடைபெறும்போது இந்த விடயம் கிளப்பப்படுவதுடன் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்படும் என்று தெரிகின்றது. பள்ளிவாசல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நிறுவனம் இந்த வருடம் முற்பகுதியில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியிருந்தமை நினைவுகூரத்தக்கது. நாடுகளின் தலைவர்கள் , அரசுகளின் தலைவர்கள் மற்றும் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பொதுச்சபையின் 68 ஆவது மாநாட்டுக்காக வரும்போது தமக்குள் கூட்டங்களை நடத்தி விடயங்களை ஆராய்வார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இந்த மாதம் 25 ஆம் திகதி இலங்கை வரவிருக்கும் நிலையில் வெலிவேரியா சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து அதன் பிரதிபலிப்பாக நவிப்பிள்ளை இலங்கை வருகிறார். அவர் இலங்கையில் மூன்று நாள்கள் தங்கியிருப்பார். மனித உரிமைகள் சபையின் 24 ஆவது மாநாடு ஜெனிவாவில் செப்ரெம்பர் 9 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. இதனையடுத்து 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மனித உரிமைகள் சபையின் அடுத்த மாநாடு நடைபெறும். அந்த மாநாட்டில் இலங்கை விடயம் ஆராயப்படுவதுடன் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றியும்ஆராய்ந்துமுடிவெடுக்கும். இந்த 24 ஆவது மாநாட்டில் இலங்கை தொடர்பாக நவிப்பிள்ளை வாய் மூலமான அறிக்கையொன்றை வழங்குவதுடன் அடுத்துவரும் 25 ஆவது மாநாட்டில் எழுத்து மூலமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார்.

வெலிவேரிய சம்பவம் குறித்து அமெ. ரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் கடுமையான கண்டனம் வெளியிட்டுள்ளன. பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் காரியாலய அமைச்சர் அலஸ்டயர் பேர்ட் இணையத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களின் குடும்பங்களும் எமது கருத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் பிரார்த்திக்கின்றோம். பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளரை எமது தூதரக அதிகாரிகள் மருத்துவமனையில் சென்று பார்த்துள்ளார்கள். மேற்கொண்டும் உதவி தேவையென்றால் நாம் வழங்கத் தயாராய் உள்ளோம்.

அவர் தாக்கப்பட்டமை, அவர் ஊடகவியலாளராய் இருப்பதனால் நடந்துள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்தக் குற்றத்தை யார் செய்தது என்பதை இலங்கை அதிகாரிகள் விரைந்து கண்டுபிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும். இலங்கை ஊடகவியலாளர்கள் சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் அனேகர் தாக்கப்படுவது சமீப வருடங்களில் அதிகரித்து வந்துள்ளது. பல சம்பவங்கள் சிறிய அளவில் ஆராயப்பட்டுள்ளன அல்லது முற்றாக ஆராயப்படவே இல்லை. தீர்வுகளும் காணப்படவில்லை.

இலங்கை அரசாங்கம் இந்த மாதிரிச் சம்பவங்கள் தொடர்பாக கூடியவரை விசாரணைகள் நடத்தி தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரிட்டனும் ஐரோப்பிய யூனியனும் வற்புறுத்தியுள்ளனவென்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில், மக்களுக்கு அமைதியாக போராட்டம் நடத்தும் உரிமையை அதிகாரிகள் மதிக்க வேண்டும். தேவாலயம் ஒன்றில் அடைக்கலம் புகுந்திருந்த மக்களும் தாக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் குறித்து நாம் முக்கியமாக கவலையடைந்துள்ளோம். வன்முறை அதுவும் வணக்கஸ்தலம் ஒன்றின் மீது நடத்தப்பட்டுள்ளமைக்கு நியாயம் கற்பிக்க முடியாது. வெலிவேரியாவில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பாக சகல அம்சங்களும் முழுமையாகவும், வெளிப்படையாகவும் ஆராயப்பட வேண்டும். அதன் முடிவுகள் வெளியிடப்பட வேண்டும். தவறிழைத்தவர்கள் மீது விசாரித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நம்பகமான பொறிமுறையொன்று அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டம் விரைவில் நடைபெறவிருப்பதையும் நவிப்பிள்ளை இலங்கை வரவிருப்பதையும் கருத்தில் கொண்டு சமீப காலத்தில் அரசு தனது நிலைப்பாட்டை மறு பக்கமாக மாற்றிக் கொண்டிருப்பதை காண முடிகின்றது. கடந்த முறை ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இலங்கைக்கு எதிராக கருத்து வெளியிட்டவர்களுக்கு எதிராக பகைமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது மட்டுமன்றி திருமதி நவிப்பிள்ளை மீது ராஜதந்திர முறைக்கு மாறாக தனிப்பட்ட முறையில் தாக்குதல்களையும் நடத்தியிருந்தார். ஆனால் இப்போது இந்த விடயங்களில் அரசு கருத்துமாற்றம் செய்து கொண்டிருக்கிறது. மனித உரிமைகள் சபை எழுப்பியிருந்த சில பிரச்சினைகள் தொடர்பாக அரசு அவசரமாக சில நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த உதவி சுப்பிரண்டன் ஒருவர் உட்பட 12 பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 2006 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் கட்டுபெத்த வளாகத்தைச் சேர்ந்த ஆறு தமிழ் மாணவர்களின் கொலையில் இவர்கள் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# தமிழரின் துயர் துடைக்க கையில் வேல் கொண்டு வா!

## நல்லூரானுக்கு இன்று கொடியேற்றம்





காரை.எம்.பி.அருளானந்தம்.

தமிழ் தெய்வமாம் முருகனுக்குத் தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

ஈழத்திருநாட்டில் முருகப்பெருமான் புண்ணியதலங்களான கதிர்காமத்திலும் வடக்கே மாவிட்டபுரத்திலும், தொண்டமானாறு செல்வச் சந்நிதியிலும், நல்லூரிலும், கந்தவனக் கடவையிலும், மண்டூரிலும் சித்தாண்டியிலும், வெருகலிலும் பன்னெடுங்காலமாக கோயில் கொண்டு அருள் பாலித்து வருகின்றான்.

நல்லூர் என்றதும் நல்லூர்க் கந்தன் தான் நம்முன் தோன்றுகிறான். கந்தனின் இந்தத் திருக்கோயில் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரத்திலே ''நல்ல ஊர்'' நல்லூர், சைவ அனுஷ்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றாக விளங்குகிறது. நல்லூர்க் கந்தன் கோயிலை நடுக்களமாகக் கொண்டு சுற்றியுள்ள வீதிகளில் எல்லாம் முருக பக்தர்களையே காணலாம். அங்கு வதியும் மக்கள் அனைவரும் அதிகாலையில் கந்தனின் மணியோசை தமது காதுகளில் ஒலிக்க தமது அன்றாட கருமங்களை முருகன் திருவருள் கொண்டு ஆரம்பிக்கின்றார்கள்.

ஈழநாட்டிலே தமிழ் மன்னர் மணி முடிதரித்து செங்கோலோச்சிய காலத்தில் அவர்களின் இராசதானியாகிய நல்லூரிலே நடுநாயகமாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோயில். யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிற்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றுக்கும் நெருங்கிய பிணைப்புள்ளது. யாழ்ப்பாண இராச்சிய மக்களது எழுச்சியும் வீழ்ச்சியும் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தே நிகழ்ந்து வந்துள்ளன.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூரிலே கந்த சுவாமிப் பெருமானுக்கு இன்று விஜய வருடத்துக்கான கொடியேற்றப் பெருவிழா பக்தி பூர்வமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

### கொடிச் சேலை

நல்லூர் கந்தனின் கொடியேற்றத்துக்கான கொடிச்சேலையை நல்லூரில் வாழுகின்ற செங்குந்த மரபினரே அழகியதோர் தேரில் வைத்துக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். யாழ்ப்பாணத்தில் வதியும் செங்குந்த மரபினர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு கொடிச் சேலை கொடுத்துதவுவது அவர்களுடைய முன்னோர் சிதம்பரக் கோயிலுக்குக் கொடிச் சேலை அளித்த வரலாற்றை நினைவுபடுத்துகின்றது.

இன்று நல்லையம்பதியிலே காலை 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெறுகின்றது. கொடியேற்ற விழாவை காண்பதற்கு பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுகின்ற காட்சி பக்திபூர்வமான ஒரு சூழ்நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கும். மஹோற்சவங்கள் ஆரம்பமாகும் இன்றிலிருந்து அதிகாலை 4 மணிமுதல் நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேர்த்திக் கடனை நிறைவு செய்வதற்காக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்கள் ''முருகா முருகா'' என்ற நாமம் எங்கும் பக்திப் பரவசத்தைத் தோற்றுவிக்கும்.

உற்சவ காலங்களில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் பூலோக கைலாயமாகக் காட்சியளிக்கும். அடியார்கள் அமைதியாக வீதிவலம் வந்து கந்தனை வழிபாடு செய்வர். இறைவன் தூய்மையே உருவானவன். தூய்மை தங்குமிடத்தில் இறைவன் தங்குகிறான். அங்கு அழகு பொலிகின்றது, அன்பு மலிகின்றது, மனம் இலயிக்கின்றது, இன்பம் பெருகுகின்றது.

இத்தகு அச்சம் அகற்றும் அயில் வேலவனாக நல்லூரில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற பெருமான்.

இந்த ஆண்டிலாவது தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தில் நிம்மதியாகவும் நல்லதொரு தீர்வுக்குரியவர்களாகவும் வாழ நல்லைக் கந்தன் அருள்பாலிக்க வேண்டுமென அனைவரும் பிரார்த்தித்து நல்ல வண்ணம் வாழ்வோமாக.

---

தட்சா.ஜோ

# கனவுகளை விரியுங்கள்



## இன்று சர்வதேச இளைஞர் தினமாகும்

நாட்டின் சொத்துக்களாகக் கருதப்படும் இளைஞர்களை வழிப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி எதிர்காலமொன்றுக்கு வித்திடுவதும் அவர்களை கௌரவித்து மதிப்பளிப்பதும் இளைஞர்தினத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி ஆண்டுதோறும் ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி சர்வதேச இளைஞர் தினம் கொண்டாப்படுகின்றது. இளைஞர்கள் நாட்டின் எதிர்காலம் என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் அநேக நாடுகளில் இளையோரே அதிகம் வேலையற்றோராக இருக்கின்றார்கள். இளைஞர்கள் துடிதுடிப்பு, அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்று, இளமை மிகுந்தோராக வாழ்வதே இன்றைய சூழலின் தேவையாகிறது.

இளைஞர்கள் உலகின் பல முன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளைத் தமக்கே உரிய தகுதியால் அலங்கரித்து வருகிறார்கள். இது பாராட்டத்தக்க விடயமாகும். குடும்பம் மற்றும் தன்னைச் சார்ந்தோரின் நலனுக்காக பணிபுரிய சுய கௌரவம் பார்க்காமல் குடும்பப் பொறுப்புடன் செயல்படும் இளைஞர் பட்டாளமும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை. தமக்கென தனிப் பாதையை வகுத்துக் கொண்டு, அதில் திறமையுடனும், துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிக்கும் இளைஞர்களுக்கு வாழ்த்த வேண்டிய தேவை நம் முன்னே உள்ளது.

இன்று ஒவ்வொரு நாட்டிலும், அந்த நாட்டின் வளர்ச்சிக்கு, இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. அனைத்து துறைகளிலும் குறிப்பாக ராணுவம், விளையாட்டு, தொழில்நுட்பம், வியாபாரம் எனப் பல துறைகளிலும் இவர்கள் சாதிக்கத் துடிக்கின்றனர்.

இளைஞர்களில் சிலர் போதைப் பொருள் உபயோகிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகின்றனர். அண்டைக் காலமாக பாடசாலை மாணவர்களும் இந்தப் பழக்கத்தில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயமாகும். போதைப் பழக்கத்தால் இளைஞர்கள் மட்டுமல்ல அவர்களின் பாசமிகு குடும்பம் உட்பட அவர்களின் சமூகமுமே பாதிக்கப்படுகிறது.

எனவே, ஒவ்வொரு இளைஞர்களும் தம் திறமைகளை வெளிக் கொணர்ந்து, நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவ இந்த நாளில் உறுதி ஏற்க வேண்டும்.

''அளவற்ற தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள். நான் இளமையில் அத்தகைய நம்பிக்கை உடையவனாக இருந்தேன். அதுதான் இந்தப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய சக்தியை எனக்களித்து இருக்கிறது. இளமையும், சக்தியும், நம்பிக்கையும் இருக்கும் காலத்தில்தான் உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்'' என சுவாமி விவேகானந்தர் கூறி இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டத் தவறவில்லை.

''இளைஞர்களே கனவு காணுங்கள்'' என்றார் அப்துல் கலாம். உங்களின் மீதும் உங்கள் திறமைகளின் மீதும் உங்களுக்கு உள்ள ஆழமான நம்பிக்கைதான் உங்கள் கனவுகளை நிறைவேற்றும். இளைஞர்கள் தமது கனவைச் சொல்லும் போது அந்த வார்த்தைகளில் உயிர் துடிப்பு இருக்க வேண்டும். கனவு எதுவாக இருந்தாலும் அதை சாத்தியமில்லாது என்று ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதுவும் இளைஞர்களுக்கு இல்லை. '' சாத்தியமில்லாதது'' என்று எதுவுமேயில்லை.

''ஒளி படைத்த கண், உறுதிகொண்ட நெஞ்சம், களிபடைத்த மொழி, கடுமை கொண்ட தோள், தெளிவு பெற்ற மதி'' என்று கூறிய பாரதியின் வார்த்தைகளை இளைய சமுதாயம் மெய்ப்பிக்கவேண்டிய தருணம் இது.

# மாற்றங்களையும் கடந்து.....



“ அடிப்படை வசதிகள் இல்லாத பெண்களும் உண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் சங்கடங்களையும் தாங்குகின்றாள்.

விஞ்ஞானரீதியாகவும், சமூக ரீதியாகவும் பெண்ணுக்கும் ஆணுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. பெண்ணுக்கும் ஆண்களுக்கும் மாற்றங்கள் உண்டு. ஆனால் பருவ காலத்தில் பெண்ணுக்குத்தான் முதலாவதாக மாற்றங்கள் ஏற்படும்.

முதலாவதாக பெண் தாய்மையை அடைவதற்கான மாற்றம் நிகழ்கின்றது. சிறுவயதானாலும் இந்த முக்கியமான இயற்கையின் பொறுப்பை அவள் ஏற்றுக்கொள்கிறாள். அதற்காகத் தயார் ஆகிறாள். தன் உடலில் புது உணர்வுகள். அதில் பல வலியைத் தருவதாகவும் உடல் பலவீனத்தைத் தருவதாகவும் இருக்கின்றன.

அதை எதிர்கொள்வதற்கு அடிப்படை வசதிகளும் இல்லாத பெண்களும் உண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் சங்கடங்களையும் தாங்குகின்றாள். இதையும் தாண்டி சமூக சமய சார்ந்த சில சடங்குகளையும் எதிர்கொள்கிறாள். இச்சடங்குகளில் சிலருக்கு உடல் நிலை பாதிப்பும் ஏற்படுகின்றது.

ஆனாலும் இவையெல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு வாழ்க் கையை கொண்டு செல்கிறாள். இரண்டாவது மாற்றம் தாய் மையை முழுமையாக அடைவது. இதில் தனக்குள் ஒரு உயிர் இருப்பதை உணர்வாள். அவளுக்குள்ளே அதை தாங்கிக் கொள்வாள்.

அதிலும் வலிகள், பொறுப்புணர்வு, அவளைக்கொல்லும். ஆனாலும் மீண்டும் உயிர்பிளைப்பாள். சமூகத்திற்கும் வாழ்க்கைச் சக்கரத்திற்கும் முக்கிய பங்கை கொடுக்கிறாள். மூன்றாவது மாற்றம் பருவத்தையும் தாண்டி தாய்மையையும் தாண்டி முதுமைக்காலத்தில் தனக்குள் இருந்த சில உடல் பாகங்கள் செயல் இழப்பதை உணர்கிறாள்.

மறுபடியும் வலிகள் தன் வாழ்க்கைக்கு சில மாற்றங்களையும் அர்த்தங்களையும் கொடுத்த பாகங்கள் செயலிழப்பது கோமா நிலையில் இருக்குமொரு நோயாளியின் உணர்வு போல்தான். நாலாவது மாற்றம் கோமா நிலையினையும் வென்று மறுபடியும் உயிர்பெறும் நோயாளி போலவே செயல்லற்றுப்போன பாகங் களை ஏற்றுக்கொண்டு வாழ்க் கையை இன்னொரு கண் ணோட்டத்தில் புதுமையாக வாழப் பழகுகின்றாள்.

இவ்வளவும் ஒருபெண்ணுக்கு சாதாரணமாகவே இருக்க கூடிய மாற்றங்கள். இது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட விடயங்கள். இத்தோடு சமூகமும் கலாச்சாரமும் பெண்ணுக்கு மாற்றங்களை ஏற்படுத்திக்கொடுக்கும். அதையும் ஏற்றுக்கொள்கிறாள். இவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு சாதனைகளைப் படைப்பவள் தான் பெண்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் “திலகம்”, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்



பெண்களே சூழ்நிலைக்கேற்ப அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டும் என்பதில்லை. யாரிடம் பேசும் போதும் வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முரட்டுத்தனமாக பேசாமல் மென்மையாக பேச வேண்டும்.. துணிவுடன் இருங்கள். ஆனால், எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள்.

தொடர்ந்து கடுமையாக உழையுங்கள்... ஏதாவது ஒரு விசேடமான திறமை உங்களுக்கு இருக்கும். அது என்னவென்று அறிந்து அதில் முயற்சியுடன் ஈடுபடுங்கள். எழுத்திலும், பேச்சிலும் திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள்.

அடிப்படைகளையும் விவரங்களையும் தனித்தனியாகப் பிரித்துக்கொள்ளுங்கள். எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும் திட்டமிட்டு செயல்படுங்கள்.. அதே சமயம் விவரங்களை அலட்சியப் படுத்தாதீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

ஏமாளியாகவோ, தலைக் கர்வத்துடனோ இருக்காதீர்கள். மனதில் சித்திரம் உருவாக்கி முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடியான எதிர்காலத்தை மறந்து நீண்ட எதிர்காலத்துக்குத் திட்டமிடாதீர்கள். மரியாதைக் குறைவினையோ, வெறுப்பையோ வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

வேலையை நேசியுங்கள். அதுவே முழுத் திருப்தியை அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள் தான் பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன், நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க அது உங்களுக்கு உதவும்.

# பெண் புத்தி பின் புத்தி



பெண் புத்தி பின் புத்தி என்று நம்மூரில் சொல்வார்கள் அதற்கு அர்த்தம், பின்னாளில் வரக் கூடியதையும் சிறப்பாக கணிக்கக் கூடியவர்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆண்களின் மூளையைவிட பெண்களின் மூளை சிறிதாக இருந்தாலும், அதற்குத் திறன் அதிகமாக உள்ளது என்று ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா, லொஸ்ஏஞ்சல்ஸ் மற்றும் ஸ்பெயினின் மட்ரிட் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நரம்பியல் ஆய்வாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பல்வேறு புலனறியும் தேர்வுகளை வைத்துச் சோதனை மேற்கொண்டனர். இதில் 18 முதல் 27 வயது கொண்ட 59 பெண்கள் மற்றும் 45 ஆண்கள் பங்கேற்றனர். ஆய்வு முடிவு விவரம்:

ஆண்களின் மூளைய்யை விட பெண்களின் மூளை 8 சதவீதம் சிறியதாக உள்ளது. ஆனால், ஆண்களின் மூளையைவிட பெண்களின் மூளைக்குத் திறன் அதிகமாக உள்ளது. இதனால் தான் ஆண்களைவிடப் பெண்கள் திறமையானவர்களாக விளங்குகின்றனர். தூண்டுதல் பகுத்தறிவு, எண் திறன், நிலைமையை வேகமாக மாற்றி விடக்கூடிய திறன் ஆகியவற்றில் ஆண்களைவிட பெண்கள் சிறப்பாக விளங்குகின்றனர்.

“ ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளை 8 சதவீதம் சிறியதாக உள்ளது. ஆனால்,ஆண்களின் மூளையைவிட பெண்களின் மூளைக்கு திறன் அதிகமாக உள்ளது. இதனால் தான் ஆண்களை விட பெண்கள் திறமையானவர்களாக விளங்குகின்றனர்

சிக்கலான விடயங்களிலும் பெண்களின் மூளை, மிகக் குறைந்த செல்களின் சக்தியை மட்டுமே பயன்படுத்தி தீர்வு காணும் திறன் படைத்துள்ளது. எனினும், புலம்சார்ந்த நுண்ணறிவில் ஆண்கள் சிறப்பாக விளங்கினர். இவ்வாறு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சியில் சமூக சேவைகள் திணைக்களத்தின்

# அலுவலகக் கட்டடத்தை பூர்த்தியாக்க 'யுனிசெப்' ரூ. 2 மில்லியன் ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஓக.12
கிளிநொச்சி கூட்டுறவு வளாகத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் அலுவலகக் கட்டட வேலைகளுக்கு 'யுனிசெப்' நிறுவனம் 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கடந்த வருடம் 3 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு இந்த அலுவலகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.
கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தற்போது 'யுனிசெப்' நிறுவனம் 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.
வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயற்படும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகங்களிலும் சமூக சேவைகள் திணைக்களத்தின் சேவைகளை சிறப்பாக ஒருங்கிணைக்கும் நோக்குடன் தனியான அலுவலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
வவுனியா மாவட்டத்துக்கான சமூக சேவைகள் அலுவலகம் வைரவப் புளியங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான அலுவலகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-9)

> வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கடந்த வருடம் 3 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு இந்த அலுவலகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு

கிளிநொச்சி, ஓக.12
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான இருவருக்கு மாதாந்தம் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் சிறுநீரக பாதிப்புக்கு உள்ளான வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் விவரங்களை சகல பிரதேச செயலகங்களிடம் கோரியிருந்தது.
இதன் பிரகாரம் முதற்கட்டமாக கிடைத்த இரு விண்ணப்பங்களை கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினூடாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பியிருந்தார். அதன் பிரகாரம் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான இருவருக்கும் மாதாந்தம் கொடுப்பனவு ஒன்றை வழங்க வென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வைத்தியசாலையில் வழங்கப்பட்ட வைத்தியச் சான்றிதழுடன் தத்தமது பிரிவு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## அடிப்படை வசதிகள் இல்லாத கொக்கிளாய் அஞ்சல் நிலையம்

முல்லைத்தீவு, ஓக.12
முல்லைத்தீவு கொக்கிளாய் உப தபாலகம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதால் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இயங்கி வந்த மேற்படி தபாலகம் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வை அடுத்து 1985 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒட்டுசுட்டான் பகுதியிலும், பின்னர் 2003 ஆம் ஆண்டு வரை முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியிலும் இயங்கி வந்தது.
தற்போது 1983 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் குறித்த உப தபாலகம் கொக்கிளாய் மேற்கிலுள்ள ஒரு இடத்தில் இயங்கி வருகின்றது.
ஆனால் இதற்கென நிரந்தரமாகத் தபால் அதிபரும் ஏனைய உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படவில்லை. மேலும் ஏனைய வசதிகளான தளபாடம், கணினிகள், குடிதண்ணீர், நிரந்தரக் கட்டடம் என்பனவும் இல்லாத நிலையே உள்ளது.
இதனால் இந்தப் பகுதி மக்கள் தமது அஞ்சல் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-6)



தினமும் மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து வேறு பல இடங்களுக்கு பஸ் சேவைகள் இடம் பெறுகின்றன. ஆனால் அதிக எண்ணிக்கையான பயணிகள் பயன்படுத்தும் இந்த பஸ் நிலையம் பகுதி கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமலும் குப்பை கூழங்கள் நிறைந்தும் காணப்படுகின்றது. பொது மக்களினால் வீசப்படும் கழிவுப் பொருள்கள் உரிய முறையில் அகற்றப்படாமையால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இங்கு வாழும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மன்னார் பிரதேச சபையினர் இதில் கூடிய கவனம் செலுத்துவதுடன் குப்பைகளை அகற்றுவதற்கும் சுகாதாரத்தைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-86)

## பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் விநியோகம்

அக்கராயன், ஓக. 12
பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள பல பாடசாலைகளுக்கு பௌசர் மூலமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.
தற்போது பாடசாலைகளின் விடுமுறை காலம் என்பதால் குடிதண்ணீர் வழங்கப்படுவதில்லை. ஆனால் அடுத்த தவணைக்கென பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது பூநகரி மகா வித்தியாலயம், ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், செம்மங்குன்று பாடசாலை, செல்லையா தீவு, ஞானிமடம், கறுக்காய்த்தீவு, நல்லூர் மகாவித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளுக்கு குடிதண்ணீரை வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினர் வழங்கிய பௌசர் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## மண் அணைகளை அகற்றுமாறு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.12
கடந்த போரின்போது பயிர்ச் செய்கை நிலங்களில் அமைக்கப்பட்ட மண் அணைகளை அகற்றித் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த போரின்போது கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள விவசாய வயல் நிலங்களில் மண் அணைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அவை இன்றுவரை அகற்றப்படாததால் இந்தப் பகுதிகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.
இருந்த போதிலும் வயல் காணிகளை ஊடறுத்துச் செல்லும் மண் அணைகளுக்கு இருபுறமும் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் போது நீர் பாய்ச்சுதல், பராமரித்தல் என்பவற்றில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை மக்கள் மீள்குடியமர்ந்து நான்கு வருடங்களாகிய போதிலும் போரின்போது சேதமாக்கப்பட்ட பயிர்ச் செய்கை நிலங்கள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-6)

## ஓலைக் கொட்டகைகளில் பாடசாலை

அக்கராயன், ஓக. 12
பூநகரி மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை நிரந்தரக் கட்டடம் எதுவுமின்றி ஓலைக் கொட்டகைகளில் இயங்கி வருகின்றது.
65 மாணவர்களைக் கொண்ட இந்த ஆரம்பப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றையாவது அமைத்துத் தாருங்கள் என்று நீண்ட காலமாக இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
ஆனால் இது வரை கட்டடம் எதுவும் அமைக்கப்படவில்லை. மாரி கால மழை ஆரம்பிக்குமாயின் இந்தப் பாடசாலை மாணவர்கள் இடர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகும்.
எனவே இனியும் தாமதிக்காது நிரந்தரக் கட்டமொன்றை அமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

# போரின்போது கணவரை இழந்த பெண்களுக்கு உபகரணங்கள்


மன்னார், ஓக.12
போரின் போது கணவன்மாரை இழந்த நிலையில் குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களுக்கு சுய தொழிலை மேற்கொள்வதற்கான சுய தொழில் உபகரணங்கள் மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவையினால் வழங்கப்பட்டன.
நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு பேரவை அலுவலகத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.
இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட 103 பயனாளிகளில் முதல் கட்டமாக 19 பேருக்கு இவை வழங்







கப்பட்டன.
இவர்களில் 10 பேருக்கு சிறுகடை நடத்துவதற்கான பொருள்களும், ஏனைய 09 பேருக்கு தையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஏனையவர்களுக்கு இரண்டாவது கட்டத்தில் இவை வழங்கப்படவுள்ளன.
இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் எஸ்.கேமன், அதன் வடகிழக்கு இணைப்பாளர் எஸ்.ஜேசுதாசன் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் திட்ட இணைப்பாளர் பிரியங்கர கொஸ்தா, இளைஞர் திட்ட இணைப்பாளர் லக்சிறி, பிரஜா அபிலாசை வலை அமைப்பின் இணைப்பாளர் ராஜன் மற்றும் பெண்கள் திட்ட இணைப்பாளர் லவினா, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் திருசெபமாலை அடிகளார், மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் ஏ.சகாயம், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எம்.எம்.ஆலம், ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சுயதொழில் பொருள்களை வழங்கி வைத்தனர். (க-12)



சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான காணொலி படக் காட்சி யுடனான விளக்கவுரை பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் நடத்தப்பட்டது. (வ-9)

# தென்மராட்சி கிழக்குக்கான வீதி புனரமைப்பு காணுமா?

தென்மராட்சி, ஓக.12

மீசாலை சந்தியிலிருந்து அல்லாரை ஊடாக தென்மராட்சி கிழக்கு பிரதேசங்களுக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கேட்டுள்ளனர்.

நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் எல்லைக்குள் உள்ள குறித்த வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் பராமரிக்கப்படுகிறது. இந்த வீதி மீசாலைச் சந்தியிலிருந்து தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள பாலாவி, வெள்ளாம் போக்கட்டி, கச்சாய், தவசிகுளம், உசன், கெற்பேலி, விடத்தற்பளை உட்பட்ட கிராமங்களுக்கும் செல்வதற்கு குறுகிய பாதையாக உள்ளதால் தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ் வீதியின் பல இடங்கள் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வாகனங்களில் செல்வோரும் நடந்து செல்வோரும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். மழை காலங்களில் சேதமடைந்த இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (வ-9)

# மாவிட்டபுரம் – கீரிமலை வரையான தனியார் பஸ் சேவைக்கு கோரிக்கை

வலி.வடக்கு,ஓக.12

மாவிட்டபுரம் –கீரிமலை வரையான தனியார் மினி பஸ் சேவையை நடத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மாவிட்டபுரம் வரையான தனியார் பஸ் சேவை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சேவை என்பன நடைபெறுகின்ற போதிலும் கீரிமலை வரை குறித்த பஸ் சேவைகள் நடை பெறாமையால் கீரிமலை செல்லும் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.



குறிப்பாக கிரிமலை செல்ல வேண்டியவாகள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதுடன் ஓட்டோக்களுக்கு பணம் செலுத்தி செல்ல வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

இதேபோன்று வலி வடக்கு பிரதேச செயலகம் வலி வடக்கு பிரதேச சபை, தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை, வங்கிகள், கமத்தொழில் திணைக்களம், கால் நடைத் திணைக்களம் உட்பட மற்றும் பணிகளுக்கும் பொது மக்கள் காங்கேசன்துறை வீதி வழியாகவே வரவேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

இத்தகைய நிலையில் குறித்த தூரம் வரையான பஸ் சேவை இன்மையால் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் கீரிமலை– மாவிட்டபுரம் வரை காங்கேசன்துறை வீதி வழியாக நடைபெறும் அனைத்து பஸ் சேவைகளையும் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என பொது மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-86)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி



தென்மராட்சி, ஓக.12

கைதடிப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து நாளை திங்கட்கிழமை தொடக்கம் 15 ஆம் திகதி வியாழக் கிழமை வரை நர்ன்கு நாள்கள் நடைபெறும்.

சுகாதாரப் பகுதியினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் இடங்களுக்கு வளர்ப்பு நாய்களை கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தில் கடந்த வருடம் மே மாதம் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்ட நாவற்குளி, மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து கடந்த வாரம் ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# கொழும்பு - வடக்கு பஸ் சேவை இடர்கள் குறித்து ஆராய முடிவு

கொழும்பு, ஓக.12

கொழும்பிலிருந்து வட மாகாணத்துக்குள் சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடலை எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடத்த தேசிய போக் குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்துக்குள் சேவையில் ஈடுபடும் பஸ்களின் சேவை தொடர்பாகவும், எதிர்கொள்ளும் இடர்கள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளன. கொழும்பு – 05, பார்க் வீதியில் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்களின் சேவை தொடர்பான பிரச்சினைகளை முன் வைக்கலாம். இதற்கான அழைப்பு பஸ் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-14)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான பணி ஒன்றை மதிநுட்பத்துடன் நிறைவேற்றுவீர்கள். அன்புக்குரியவர் பாராட்டுவர். தொழில் வளர்ச்சி பெற புதிய சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** அயல்வீட்டாருடன் அதிகளவில் உதவி கேட்க வேண்டாம். நடைமுறைச் செயலில் சிறுமாற்றம் தேவைப்படும். குறைந்தளவில் பணவரவு கிடைக்கும். நண்பர் வாங்கும் பொருளுக்கு நீங்கள் பேரம் பேச வேண்டாம்.

**மிதுனம்:** மாறுபட்ட சூழ்நிலை காரணமாக நண்பர் மீதான நம்பிக்கை குறையும். அத்தியாவசியப் பணியை நிறைவேற தாமதமாகும். தொழிலில் பெற்ற அனுகூலத் தன்மையைப் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** உண்மை, நேர்மை குணம் என்பவற்றை அதிகமாகப் பின்பற்றுவீர்கள். மனதில் நிம்மதி, பெருமிதம் ஏற்படும். தொழில் வளர முதலியஸ்தரின் உதவி எளிதாக கிடைக்கும்.

**சிங்கம்:** நற்செயல் புரிந்தும் மனம் வருந்துகின்ற மாறுபட்ட நிலை ஏற்படலாம். பகைமை குணம் உள்ளவரிடம் விலகுவது நல்லது. பணச் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் புதிய சிந்தனை உருவாகும். பணித்திறன் வளர்த்துக் கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாகும். இயலாதவர்களுக்கு, கருணை மனதுடன் உதவுவீர்கள்.

**நாளை**

ஆடி-28 செவ்வாய்க்கிழமை 13.08.2013
திதி: ஸப்தமி பி.இ. 02.11வரை
நட்சத்திரம்: சுவாதி பி.இ. 12.48 வரை
சுபநேரம்: 10.35 - 12.05 வரை
இராகுகாலம்: 03.05 - 04.35 வரை

**துலாம்:** நண்பரின் கவனக்குறைவான செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, சாதகமான சூழ்நிலை அறிவது நல்லது. வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் நண்பரிடம் முன்னர் கேட்ட உதவி கிடைக்கும். திட்டமிட்ட செயல்களால் கூடுதல் வெற்றி பெறுவீர்கள். தொழில் சிறந்து வாழ்க்கைத் தரம் உயரும்.

**தனுசு:** உங்களின் சிறிய முயற்சியும் அதிக நன்மையைப் பெற்றுத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனையை அதிகரிப்பீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்:** பணிகளில் அதிக முன்யோசனையுடன் ஈடுபட வேண்டும். உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். பணச்செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** மற்றவரை விமர்சிக்க சிலர் உங்களைப் பயன்படுத்துவர். சிறு பணியும் அதிக சுமைபோல தோன்றும். அனுபவ அறிவின் பயனால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** செயலில் புதிய பரிமளிப்பு உருவாகும். பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் வியத்தகு வளர்ச்சி உருவாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 9 | | 1 | | |
| 9 | | 7 | | | | 6 | | 3 |
| 3 | | | 6 | 8 | | | 2 | |
| 1 | | 2 | | 6 | | | 5 | 4 |
| 4 | | 3 | | | | 7 | | 6 |
| 8 | 9 | | | 5 | | 3 | | 2 |
| | 3 | | | 1 | 2 | | | 5 |
| 7 | | 4 | | | | 2 | | 1 |
| | | 5 | | 7 | | | 3 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 8 | 2 | 9 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 2 | 7 | 5 | 4 | 1 | 6 | 8 | 3 |
| 3 | 4 | 1 | 6 | 8 | 7 | 5 | 2 | 9 |
| 1 | 7 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 |
| 4 | 5 | 3 | 1 | 2 | 8 | 7 | 9 | 6 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 | 2 |
| 6 | 3 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 5 |
| 7 | 8 | 4 | 9 | 3 | 5 | 2 | 6 | 1 |
| 2 | 1 | 5 | 4 | 7 | 6 | 9 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தமிழர்களின் உரிமைக் குரல் நெரிக்கப்பட்டு ஆண்டுகள் 13

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 75 ஆவது பிறந்த தினம் (2013.08.12) இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது

*க.மு.தர்மராசா*



1983 ஆம் ஆண்டுக் கலவரங்களின் பின்னைய காலகட்டம் அது. அரசு, இலங்கை அரசமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை வேரறுத்த நேரம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற சட்ட விதிகளுடன் கூடிய கொடிய போர் மேகங்கள் சூழ்ந்து ஆக்கிரமித்து தமிழ் மக்களை அச்சுறுத்தத் தொடங்கிய நேரம் அது.

தமிழ் மக்களின் குரல் மெல்ல மெல்லத் தேய்ந்து ஓய்ந்தது. அச்சம் அவர்களை விழுங்கிக் கொண்டது. அவர்கள் இவ்வாறு செயலிழந்து நின்றதுதான் தாமதம், அதனைப் பயன்படுத்தி, இந்த போர் தமிழ் மக்களை விடுவிப்பதற்கு அவசியமானதும் அவர்களால் வேண்டப்படுவதும் எனப் பறைசாற்ற முயன்றது, தென்னிலங்கையின் சிங்கள தலைமைத்துவம் இதன் விளைவாக ஊரும் உலகமும் இலங்கையில் நிகழ்ந்த போர்க் கொடுமைகளைக் கண்டும் காணாமற் இருந்தபோது, தனியே ஒரு கர்ஜனை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எழலாயிற்று. வட - கிழக்குப் பிரதேசம் தமிழர் தாயகம், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என அது தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமை நாடு முழுவதும் கேட்கும் விதத்தில் முழங்கிற்று. நடைபெறுவது வெறும் போர் அல்ல, அது தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டமே என ஆர்ப்பரித்தது. 'சிங்கத்தின் குகைக்குள்ளேயே ஒலிக்கத் தொடங்கிய அந்தக் குரலுக்கு உரியவர்தான் அமரர் குமார் பொன்னம்பலம்.

தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் குமார் பொன்னம்பலம் வகித்த பாத்திரம் மகத்தானது. அந்தப் போராட்டத்தின் இரட்டைக் கிளைகளான இராணுவம், அரசியல் என்ற இரு போக்குகளில் தென் பகுதியின் அரசியல் தலைமைத்துவம் மத்தியில் அரசியல் கிளையினைத் தாங்கி நின்ற தனியொருவராக இவர் திகழ்ந்தார். தமிழர் பிரச்சினையை பயங்கரவாதத்திற்கு சமானப்படுத்தி அதனை போர்க் களத்துக்குள் மட்டுமே ஒதுக்கி ஒடுக்க நினைத்த தென் பகுதி அரசியல்வாதிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும் மத்தியிலேயே நின்று அஞ்சா நெஞ்சத்துடன் போராடிய போராளியாக அவர் மிளிர்ந்தார்.

இதன் விளைவாக அவர் வாழ்க்கையில் சந்தித்த எதிர்ப்புகளும் அச்சுறுத்தல்களும் எண்ணிலடங்கா.

தமிழர்களுக்கோ 'ம்' என்றால் சிறை வாசம் என்னும் நிலை. தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளிப்போரை அப்புறப்படுத்த ஏதுவான சட்டங்களும், தேவைப்பட்டால் இந்தச் சட்டங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் செயலாற்றக் கூடிய அரச ஆதரவு ஆயுதக் குழுவினரும் வேரூன்றியிருந்த சூழல். ஒட்டு மொத்த சிங்களத் தரப்புக்களும் தமிழர்களைப் புலிகள் என்று முத்திரை குத்தி தட்டி அடக்கி ஒடுக்கி விடலாம் எனத் தேடித்திரிந்த காலம். இவற்றின் மத்தியில் நின்று நான் விடுதலைப் புலிகளுடைய அரசியல் சித்தாந்தத்தை ஆதரிக்கின்றேன் என்று எவராலும் கூற இயலுமா?'' ஆனால் ''என்னதான் நடந்தபோதும் நான் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாகத்தான் நடப்பேன்'' என்ற சங்கற்பத்துடன் இயங்கிய குமார் பொன்னம்பலத்துக்கு அவதூறு கூறும் தொடர்பூடக விமர்சனங்களும், அச்சுறுத்தல் கடிதங்களும் தொலைபேசி அழைப்புக்களும் வந்து குவிந்தன. ஆனால் அவை எவற்றுக்கும் அவர் பின் வாங்கினாரில்லை. தமிழ் மக்கள் பகிரங்கமாகக் கூறவும் எழுதவும் பயந்து கிடந்த விடயங்களை அஞ்சாமல் வெளிக்கொணர்ந்தார். சந்திரிகா அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்து அதற்கு ஆதரவானவர்களை மிரட்டிய போதிலும் கூட, குமார் அஞ்சாது செயற்பட்டார். தன் இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தன்னால் ஆற்றக்கூடிய பங்களிப்பு அத்தனையையும் வழங்கினார்.

அவரது துணிச்சலான கருத்து வெளிப்படுத்தல்களால் ஈர்க்கப்பட்ட தமிழ் மக்கள் தாங்கள் சொல்ல நினைத்ததையும், சொல்ல வேண்டியவற்றையும் துணிச்சலுடன் சொன்னதாக அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். கருத்து வெளிப்படுத்த இயலாத தமது விரக்தியை குமார் தீர்த்து வைத்தாரெனப் புளகாங்கிதம் கொண்டனர். 1990 களில் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதம் அதிகரித்துக் கொண்டே வந்தபோதும், குமார் பொன்னம்பலம் கொடுத்த தைரியத்தில் அவர் பின்னே அணி வகுத்தவர்கள் எத்தனையோ பேர். குமார் தனியொருவராக தென்னிலங்கைத் தமிழ் மக்களுக்கு கவசகேடயமாக விளங்கினார். இன்றோ தமிழ்ச் சமூகம் பேரினவாதத் தரப்புகளின் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகளால் பரிதவிக்க நேரிட்டுள்ளது.

> **தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் குமார் பொன்னம்பலம் வகித்த பாத்திரம் மகத்தானது. அந்தப் போராட்டத்தின் இரட்டைக் கிளைகளான இராணுவம், அரசியல் என்ற இரு போக்குகளில் தென் பகுதியின் அரசியல் தலைமைத்துவம் மத்தியில் அரசியல் கிளையினைத் தாங்கி நின்ற தனியொருவராக இவர் திகழ்ந்தார். தமிழர் பிரச்சினையை பயங்கரவாதத்திற்கு சமானப்படுத்தி அதனை போர்க் களத்துக்குள் மட்டுமே ஒதுக்கி ஒடுக்க நினைத்த தென் பகுதி அரசியல்வாதிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும் மத்தியிலேயே நின்று அஞ்சா நெஞ்சத்துடன் போராடிய போராளியாக அவர் மிளிர்ந்தார்.**

பொதுவாகத் தமிழ்ச் சமூகத்துக்கே ஒரு பாதுகாப்பு அரணாக இருந்தது மட்டுமல்லாது, தனிப்பட்ட ரீதியிலும் தமிழ் மக்களுக்கு குமார் உறுதுணையாக இருந்தார். தலைநகரில் கண்மண் தெரியாத விதத்தில் இடம்பெற்ற கைதுகளின் போது எத்தனையோ தமிழ் இளைஞர்களுக்காக தாமே முன்வந்து அவர்களை விடுவிக்க பெரு முயற்சி எடுத்தவர் குமார்.

தாம் செய்த இத்தகைய உதவிகளுக்காக அவர் கைமாறேதும் எதிர்பார்க்கவில்லை. அவரது இழப்பு, தமிழர் அரசியல் அரங்கில் மட்டுமன்றி தமிழ் மக்களின் வாழ்விலும் நிரப்ப முடியாததோர் வெறுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழர் வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவடைந்து விட்டதன் அறிகுறி. அவரை மாய்த்து விழுத்துவதன் மூலமாக இனிமேல் ஒரு போதும் ஜனநாயகத் தளத்தில் தமிழர் அரசியல் கையாள அனுமதிக்கப்பட மாட்டாது என்ற பெரும் எச்சரிக்கையைத் தமிழினத்துக்கு சிங்கள பேரினவாதம் விடுத்திருந்தது. அதனை எதிர்கொண்டு, குமார் சமைத்த வழியில் அவரைப் போல் சாதனை படைக்கப்போகின்றோமா அல்லது அடிமைகளாக ஒடுங்கி, ஒதுங்கிப்போகப் போகின்றோமா என்பதே தமிழ் மக்களாகிய எங்கள் முன் இன்று பூதாகரமாக எழுந்து நிற்கும் கேள்வி.

## நல்லூர் ஆலய திருவிழாக் காலத்தில் சின்மயாமிஷனின் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் ''இந்துவாக வாழ்வோம்'' எனும் செயற்றிட்டம் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து திருவிழா காலத்தில் தினமும் காலை திருமுறை, நாம சங்கீர்த்தனம், திருப்புகழ், பஜனைப் பாடல்களை இசைக்கவுள்ளனர்.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலக மற்றும் நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியத்தின் அனுசரணையுடன் மாலை நேர திருவிழாவில் தினமும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களும், நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களும் இணைந்து பஜனைப் பாடல்களை நிகழ்த்துவர். (வ-14)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஓக. 12

வண்ணை சாந்தையர் மட ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்தி கழகத்தினால் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் பரிசில் பெறுவோர் விவரம்:-

பாலர் பிரிவு:

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ம.மதுவந்தி, முதலாம் இடத்தையும், காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தைச் சேர்ந்த கு.வைஷ்ணவி இரண்டாம் இடத்தையும், ம.சாலினி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சிறப்புப் பரிசுகளை அஸ்ரன் பாலர் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.தக்ஷணன், துரையப்பா வித்தியாலயத்தைச் சேர்ந்த ர.கதிரினியன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த த.கேதகி, ச.வைஷ்ணவி, சி.நிரோசினி, ந.கிருஜன் ஆகியோரும், வண்.நாவலர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தி.டிலானி, காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தைச் சேர்ந்த தி.றஜீவன், க.கஜேந்தினி, கி.ஆர்த்திகா, ம.ஜதுசன் ஆகியோரும் பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவு:

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த த.கயூரி முதலாம் இடத்தையும், டி.ஷாருணிக்கா இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை லி.ருஷிகா அகியோரும் பெற்றுள்ளனர். சிறப்புப் பரிசினை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த சி.கானவர்சினி, ந.புரந்தரி, ம.கிருஷ்ணவி, ர.அருள்ராஜ், வி.நித்தியரூப சர்மா ஆகியோரும், காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தைச் சேர்ந்த தி.தர்ஷிகா, கே.அபிராமி, அ.யேயந்தினி, கி.தனுஷா ஆகியோரும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது. (ந-9)

★ ★ ★

தென்மராட்சி, ஓக. 12

சாவகச்சேரி வாரிவனநாதர் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இடம்பெறும். இதனையொட்டி காலை 7 மணி தொடக்கம் சுந்தர மூர்த்தி நாயனாரின் தேவார பாராயணமும் புராண படன மும் நடைபெறவுள்ளது. (ந-14)




வடமாகாணத்தில் 35 ஆண்டுகள் அரச பணியாற்றி இளைப்பாறும் முன்னாள் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணிக்கு ''சமூகமணி'' எனும் கௌரவ பட்டத்தை வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் வழங்கி கௌரவிப்பதைக் காணலாம். (ஒ-41)

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:
18.04.1926

மறைவு:
15.08.2010

திதி:- சஷ்டி

அமரர்
**முருகேசு சண்முகம்**

என்றும் எங்கள் உயர்வதனை
எண்ணி எண்ணி வாழ்ந்திருந்த
உங்கள் நினைவை நாம் மறவோம்
உமக்காய் ஈசன் பதம் பணிவோம்.

(31317) (7.6.3)

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# இந்துமா மன்றத்தின் இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், ஓக.12
ஆன்மிகத் தொண்டர் திருமதி விஜயலட்சுமி பேரம்பலம் கடந்த 8 ஆம் திகதி சாவடைந்துள்ளார். இது குறித்து இந்து மாமன்றம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்;
திருமதி விஜயலட்சுமி பேரம்பலம் எங்கு வாழ்ந்தாலும் யோகர் சுவாமிகளின் குருபூசை, நினைவுநாள் என்பவற்றை முன்னின்று நடத்துவதுடன் அவரது உபதேசத்தை ஏற்று வாழ்ந்தவர்.
தனது கணவனின் மறைவுக்குப் பின் தமது குடும்பச் சொத்தான காணியை அகில இலங்கை இந்து மா மன்றத்துக்கு அன்பளிப்பாக வழங்கிய பெருமைக் குரியவர். இந்த மூன்று மாடிக் கட்டடமாக நிமிர்ந்து நிற்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கேட்போர் கூடத்துக்கு நன்றியுடன் பேரம்பலம் கேட்போர் கூடம் எனப் சூட்டப்பட்டிருக்கின்றது.
திருமதி பேரம்பலத்தின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



தோற்றம்
22.07.1990

மறைவு
29.06.2013

மீசாலை-கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் ஜேர்மன் நாட்டை வசிப்பிடமாக கொண்ட சிவதாசன் புஸ்பமலர் தம்பதிகளின் புதல்வன்

**அமரர் சிவதாசன் பிரகாஸ்**

(29.06.2013) ஸ்பெயின் நாட்டில் அகால மரணமடைந்து பூதவுடல் ஜேர்மன் நாட்டிற்கு எடுத்து வந்த நிலையில் அன்னாரின் இறுதிக் கிரியைகள் (15.08.2013) வியாழக் கிழமை ஜேர்மனியில் இடம்பெற்று பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகவுள்ளது. அன்றைய தினம் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி இராஜேஸ்வரி பவன் கைதடி தெற்கு. கைதடியில் உள்ள இல்லத்தில் கூட்டுப் பிரார்த்தனை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத் தருகிறோம்.

(30316)(7.6.3)

கைதடி வர்த்தக நிலையம், கைதடி.
T.P: 075 040 2302

இ.குழந்தைவடிவேல்
(ஆசையப்பா)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**நல்லதம்பி**
**மெய்யழகன் (மீசை)**

மண்ணில்
25.05.1940

விண்ணில்
13.07.2013

நவிண்டில் ஊரில் நல்லதம்பி பெற்ற நல் மதியரே
ஆலமரம்போல் நீங்கள் இருக்க
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்
நாட்டிலே நல் ஆசானாய்
நம் குடும்பத்தின் ஆணி வேராய்
ஊர் போற்றும் உத்தமனாய்.....
உற்றோருக்கு உதவியாளனாய்.....
நண்பருக்கு நல்லவனாய்....
காலன் தன் கடமையிலே
பதின்மூன்று ஏழு பதின்மூன்றிலே
கதையை முடித்துவிட்டான்
மீண்டும் ஒரு முறை வாரீரோ
மெய்யழகே மாநிலத்தில்.

கலைமதி சனசமூக நிலையம்
நவிண்டில்.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு
20.05.1939

உதிர்வு
13.07.2013



திருமதி
**கனகாம்பிகை**
**சோமசுந்தரம்**

கடந்த 13.07.2013 சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கு திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம் அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (12.08.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும் துயரத் தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகை மூலமும் பதாகைகள் மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7, மணிக்கூட்டு ஒழுங்கை.
யாழ்ப்பாணம்.
021 222 1142

(31319) (7.6.3)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை சிவயோகநாதன்



அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவயோகநாதன் (siva)10.08.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி பூலோகராஜா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின்(ராணி) அன்புக் கணவரும், சுதாகரன் (சுதா-Swiss), சுகேஷினி (துயா- இலங்கை) காலஞ்சென்ற சுஜீகரன்(சுஜீ), சுஜாஷினி (சுஜா-Finland), சுதர்ஷினி (சசி- இலங்கை), சுலோஜினி (சுலோ-இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரன் (இந்திரன்-இலங்கை), தவயோகராஜா (சாந்தன்- Finland), நேசநாதன் (நேசன்-இலங்கை), அசோக்குமார் (அசோக்-Germany) ஆகியோரின் அன்புமாமனாரும், வசீகரன், சந்திரிக்கா, சிந்துஜா, வசீந்திரன், சுதர்ஷிகா, மனோஜ் (Finland), தனோஜிகா (Finland), ஹானுஜா, சுலக்ஷன், மதிகரன், அசோஜினி, நிலக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.08.2013) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வவுனியா வேப்பங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

தகவல்: சுதாகரன்(Swiss)
நாகேந்திரன் (இந்திரன்-இலங்கை) +94 77 619 1741
சுஜாசாந்தன் (Finland) +35 844 916 3308
மனோஜ் (Finland).

வேப்பங்குளம்,
வவுனியா.

(31320)(3.5.6)

# ஒருங்கிணைந்த நேர அட்டவணை திட்டத்தை செயற்படுத்த வேண்டாம்

## போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் வேண்டுகோள்



கொழும்பு,ஓக.12

தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களை இணைத்து ஒருங்கிணைந்த நேர அட்டவணைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டாம் என்று அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம், போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்று சுமார் 25,000 வரையிலான தனியார் பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த 25,000 தனியார் பஸ்களுக்குச் சமமாக 16,666 வரையான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வரை, இந்த ஒருங்கிணைந்த அட்டவணை முறைமை நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்று சங்கத்தின் பொதுச் செயலர் சேப்பாலலியனகே தெரிவித்தார்.

> இன்று சுமார் 25,000 வரையிலான தனியார் பஸ் கள் போக்குவரத்தில் ஈடு பட்டு வருகின்றன.

தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களை ஒருங்கிணைத்து சேவையில் ஈடுபடுத்தும் செயற்பாட்டுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# கிராண்ட்பாஸ் விசாரணை குற்றத் தடுப்பு பிரிவிடம்

கொழும்பு,ஓக.12

கிராண்ட்பாஸ் பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பிலான விசாரணை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஏற்கனவே கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

கிராண்ட்பாஸ், பலாமரச் சந்தி சுவர்ண வீதியில் இரண்டு குழுவினருக்கு இடையே சனிக்கிழமை மாலை அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

அதில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் மூவர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

## பசிக்கும் தண்ணீர் பசிக்கவும் தண்ணீர்

பளபளப்பான மஞ்சள் உலோக வணிகத்தெரு அது. காலையில் கலகலத்து மாலையில் ஓய்ந்துவிட, அந்தத் தெருவை மீண்டும் மதுச்சாலைகள் கலகலப்பாக்கி விடும். ‘‘மதுபான வகைகள் விலை உயர்வு’’- காலையில் பத்திரிகையில் வந்த செய்தி. அப்படியிருக்க. ஏன் இந்த மதுச்சாலைகளில் சனக்கூட்டம் வழமையை விட முட்டிமோதுகிறது? ஒன்று வாங்கினால் ஒன்று ‘பிறீ’ என்ற வியாபார உத்தி இங்குமா? அந்த நிலை இதற்கு வராதே.

ஓ.... சமய புனித தினத்துக்காக மறுநாள் மதுசாலைகள் மூடியிருக்கும். அதற்கான முன்னேற்பாடே மொய்த்து நிற்கும் ‘குடி’மக்கள் கூட்டம்.

மது விலக்குத் தொடர்பான பிரசாரம் செய்ய ஏற்ற காலமும் இடமும் இது என எவராவது முட்டாள்தனமாக அங்கு வந்தால், அந்த சமூக நலன்விரும்பியை மிதித்துக் கூழாம் பாணியாக்கி விடும் அந்தக் குடிகாரர் கூட்டம். போயா தினமத் மட்டுமல்ல, இந்து , கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களின் புனித தினங்களிலும் மதுச்சாலைகள் மூடப்படுமானால் என்று நினைப்பவர்கள்.. மூச்..!

‘‘யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு மதுப்பாவனை அதிகரிப்பு’’, ‘‘குடித்துத் தீர்க்கும் இளைஞர்கள்- நீரிழிவு ஆபத்துக் காத்திருக்கிறது’’- பத்திரிகைச் செய்திகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு குடாநாட்டுக்குள் விரைந்து வரும் பென்னம்பெரிய லொறிகள் சுமந்து வரும் நின்று கொல்லும் மதுபானங்கள். இவற்றுடன் போட்டியிட்டு குடிசைக் கைத்தொழில்களில் ஒன்றாகிவரும் அன்று கொல்லும் கசிப்பு.

பசிக்குத் (பச்சைச்) தண்ணி குடிப்பவரும், பசிக்கத் (மச்சத்) தண்ணித் குடிப்பவரும் சமாந்தரமாக உலாவரும் மண் இது. மப்பும் போது தெரியாது, வயிறு உப்பும் போதுதான் தெரியும் தப்பு.

நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவம் -2013
யாழ்ப்பாணம்



வா! வா சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா வா

மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என் முன்னே
அரவணி சிவனருள் பாலா
பரவரமுரள பரமதயாளா
[சிவயோக சுவாமிகள்]

யாழ்.நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் இன்று [12.08.2013] திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாள்களும் அன்னதானமும் விடியற்காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னதானப் பணிக்கு உதவ விரும்பும் அடியார்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே உதவிகளைச் செய்யலாம். தங்கள் பேருதவிக்கு நல்லைக் கந்தன் அருள்புரிவாராக.

திரு.செ.சோமஸ்கந்தன்
மூத்ததம்பி அன்னதான மடம்,
139, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
செ.தொ.பே.: 077 828 0310

வடக்கு மாகாண சபைத் தேர்தல்
21.09.2013



யாழ். மாவட்டம்
தமிழினத்தின் தன்மானக் குரல்!
வட மாகாணத்தின் எழுச்சிக் குரல்!!
யாழ்ப்பாணத்தின் உரிமைக் குரல்!!!
வாழ்வது ஒருமுறை
வாழ்த்தட்டும் தலைமுறை!
இன்னும் ஏன் உறக்கம் தமிழா?
விழித்தெழு !!
உணர்வுள்ள தமிழரின் தெரிவு
கே. என். விந்தன் கனகரத்தினம் M.M.C
(யாழ். மாநகரசபை உறுப்பினர்)
ஈனப்பிறவிகள் சிலர் இனத்தை விற்பினும்
மானமுள்ள தமிழினம் மண்டியிடக் கூடாது!
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வதும் வெல்வதும்
தமிழாகவும் தமிழராகவும் இருக்கட்டும்!!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
முதலில் வீட்டுச் சின்னத்திற்கு நேரே புள்ளடி இடுங்கள்,
அடுத்து இல. 12 க்கு மேலே புள்ளடியிட்டு வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள்.
12
வலி தந்தோரை தோற்கடிப்போம் சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
வீட்டுக்குப் போடும் புள்ளடி விடுதலை நோக்கிய முதல்படி
- யாழ். மாவட்ட மக்கள்

உதயன்
12/08/2013

## கர்ப்பிணி தாய்மார்களும் எச்ஜவி பரிசோதனைக்கு



இலங்கையில் 64 சிறுவர்கள் ஏச்ஜவி தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு,ஓக.12
கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இனி எச்ஜவி பரிசோதனை செய்யப்படவுள்ளது.

எச்ஜவி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கையை வருடாந்தம் அதிகரிப்பதற்கும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தாயிடமிருந்து குழந்தைகள் எச்ஜவி தொற்றுக்குள் ளாவதை தடுப்பதே இதன் நோக்கம் என்று தேசிய பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே கூறினார்.

2012 ஆம் ஆண்டு 17 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார் எச்ஜவி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில் ஒன்பது பேர் எச்ஜவி தொற்றுக்கு இலக்காகியிருந்தமை உறுதி செய்யப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். இலங்கையில் 64 சிறுவர்கள் எச்ஜவி தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கர்ப்பிணித் தாய்மார் எச்ஜவி தொற்றுக்கு இலக்காகியுள்ளதை முன்கூட்டியே அறிந்துக்கொண்டால் பிள்ளைகளை அந்தத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)


# கிராண்ட்பாஸ் சம்பவம் எமக்கு தொடர்பில்லை

### பௌத்த தீவிர அமைப்புகள் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.12
கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தின் சுவர்ண வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கும் தமது அமைப்புகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று பொது பல சேனா, ராவண சக்தி மற்றும் சிங்கள ராவய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

''இந்தச் சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை'' என்று பொது பல சேனாவின் பொதுச் செயலர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

''நாங்கள் இந்து, முஸ்லிம் மக் களுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகிறோம். பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துக்கு கவலை தெரிவிக்கின்றோம்'' என்று சிங்கள ராவய அமைப்பின் தேசிய பொதுச் செயலர் மெடில்லே ஞானலோக தேரர் கூறினார்.



''இந்தச் சம்பவத்துடன் எமது அமைப்பின் எந்த வொரு உறுப்பினரும் தொடர்பு படவில்லை. எமது அமைப்பு ஒருபோதும் பிற மத மக்களை துன்புறுத்தியதில்லை'' என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## பெண்ணின் பணப்பை அபகரிப்பு

கொழும்பு,ஓக.12
அநுராதபுரம் புனித நகரில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண்ணின் பணப் பையை கொள்ளையர் குழு அபகரித்துள்ளது.

இந்தப் பெண் தமது நண்பியுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அவரது பணப்பை அபகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பணப்பையில் எட்டு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடன் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் பொருள்கள் இருந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச)

## முதலை முட்டை வைத்திருந்த நபர் கைது



கொழும்பு,ஓக.12
களுத்துறை, ஹெட்டிமுல்ல பிரதேச வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 36 முதலை முட்டைகளை கைப்பற்றியுள்ள பொலிஸார், அவற்றை தம் வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இலங்கைக்கே உரித்தான உயிரினங்களில் முதலை அடங்காவிடினும் அவை, வனவிலங்குகள் மற்றும் அரிய உயிரின பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மிகவும் பாதுகாப்பான மிருகமாக அறிவிக்கப்பட்டவையாகும். (ச)



கொழும்புத் துறைமுகத்தின் தெற்குத் தளமான தங்க நீர்த்துறை பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளதையடுத்து நூற்றுக்கணக்கான மக்கள் அதனை நாளாந்தம் வந்து பார்வையிடுகின்றனர்.

## கிராண்ட்பாஸ் பதற்றம் கட்டுக்குள்

### ஊரடங்கு உத்தரவும் நீக்கம்

கொழும்பு,ஓக.12
கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் சனிக்கிழமை ஏற்பட்ட பதற்றமான நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி வரை நடை முறைப்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் முஸ்லிம் வழிபாட்டிடம் திடீரெனத் தாக்கப்பட்டதால் சனிக்கிழமை ஏற்பட்ட மோதல்களால் பிர தேசத்தில் கடும் பதற்றம் நிலவியது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரிகள் உட்பட சிலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

## மாகாண வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணி கண்காணிப்பில்

கொழும்பு,ஓக.12
மாகாணசபைத் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் நடவடிக்கைகளுக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அரச அச்சகக் கூட்டுத்தாபன பதில் அச்சக அதிகாரி லலித் சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய இந்த நடவடிக்கைகளுக்காக பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக சீ.சீ.டி.வி கண்காணிப்புக் கமெராக்கள் பயன்படுத்தப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி விசேட தினமாக அறிவித்து, வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகிக்க தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மாகாண சபை தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 27ஆம் திகதி தபால் திணைக்க ளத்திடம், தேர்தல்கள் திணைக்களம் கையளிக்கவுள்ளது.

இதேவேளை, இடம்பெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களுக்கும் 5 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வெலிவேரிய சம்பவத்தில் உயிரிழந்த மாணவர் குறித்து விசேட கவனத்தை செலுத்த வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஓக.12
வெலிவேரிய சம்பவம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு நடத்தும் விசாரணைகளில் சம்பவத்தில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் தொடர்பில் விசேட கவனத்தை செலுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம், மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். மேலும் சில மாணவர்கள் காயமடைந்தனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.



இந்தச் சம்பவத்தில் மாணவர்கள் கொல்லப்பட்டு, காயமடைந்தமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்தச் சம்பவ குறித்த தகவல்களை வழங்க இலங்கை ஆசிரியர் சங்கத்துக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ரத்துபஸ்வல குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குமாறு கோரி வெலிவேரிய பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைக்கப்பதற்காக படையினர் நடத்திய தாக்குதலில் அகில தினேஷ் (வயது-17), ஷமில ரவிஷான் பெரேரா (வயது-18) ஆகிய இரு மாணவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசே முழுப் பொறுப்பு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

''கொழும்பு- கிராண்ட்பாஸ் சுவர்ண வைத்திய வீதியிலமைந்துள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதலுக்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும்'' என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்தது.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள கட்சியின் தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்ததாவது:-

**அரசமைப்பு மீறல்**

வெலிவேரியவில் குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கேட்ட சிங்கள பௌத்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய இந்த அரசுக்கு, முஸ்லிம் மக்களைத் தாக்குவது ஒன்றும் பெரிய விடயமல்ல.
சனிக்கிழமை இரவு பள்ளிவாசல் தாக்கப்பட்டபோது பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.
இது நாட்டிற்கே கேடான ஒரு விடயமாகும். இலங்கை அரசமைப்பின் 10 ஆவது அத்தியாயத்தில் மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
ஆனால், நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன. அரசும் இவற்றைக் கண்டுகொள்ளாமலேயே உள்ளது.
இதன் மூலம் நாட்டின் அரசமைப்பை அரசு மீறுகிறது. நாட்டிலுள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கும் இதுபோன்ற செயற்பாடுகளை அரசு செய்து கொண்டே வந்தால் 30 வருடத்திற்கு முன் இலங்கையில் இருந்த நிலை மீண்டும் வரக்கூடும் - என்றார்.

**பின்னணியில் அரசு**

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்ததாவது,
கடந்த சில தினங்களாகவே நாட்டில் முஸ்லிம்- சிங்களவர்களிடையே உள்ள ஒற்றுமையை சீர்குலைக்கும் விதமாக அடாவடிகள் பல நடந்தன.
சனியிரவு இத்தாக்குதலை நடத்தியது யார் என்றும் அதன் பின்னணி எதுவென்பதும் அரசுக்கு நன்றாகத் தெரியும்.
காரணம், அத்தாக்குதல் இடம்பெற்றபோது அங்கு சுமார் 40 இற்கும் அதிகமான பொலிஸார் இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் யாரையும் தடுக்கவோ, கைது செய்யவோ இல்லை.
பிரபாகரனையே பிடிக்க முடிந்த இந்த அரசால் ஏன் இதுபோன்ற தாக்குதல்களை நடத்தும் குண்டர்களைக் கைதுசெய்ய முடியவில்லை? இது அரசின் திட்டமிட்ட தாக்குதலாகும். தாக்குதல் நடத்தியவர்கள் சி.சி.டிவி. கெமரா மூலம் அடையாளம் காணப்பட்டும் கூட பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது அரசு தான் இந்தத் தாக்குதலின் பின்னணியென ஆணித்தரமாக எம்மால் கூறமுடியும் -என்றார்.

**உடன் நடவடிக்கை தேவை**

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் பைரூஸ் தெரிவித்ததாவது,
முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த குண்டர்கள் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே கற்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். எந்தவொரு முஸ்லிமும் பதில் தாக்குதலை நடத்தவில்லை.
அப்போது அங்கு வருகை தந்த பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்களை இன்று (நேற்று) காலையிலேயே கைது செய்வதாக எம்மிடம் கூறினார்கள். ஆனால், இதுவரையிலும் (நேற்று மதியம்) எவரும் கைது செய்யப்படவே இல்லை.
இந்த செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் அரசினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் -என்றார்.

# காசோலை மோசடி செய்த நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக். 12
இலத்திரனியல் பொருள்களை கொள்வனவு செய்துவிட்டு காசோலையைக் கொடுத்து மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அல்வாய் வாசியை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
நெல்லியடிச் சந்தியில் கொடிகாம வீதியில் உள்ள இலத்திரனியல் கடையில் 10 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்களை குறித்த நபர் வெவ்வேறு நாள்களில் கொள்வனவு செய்துள்ளார். எனினும் இதன்போது அவர் பணத்துக்குப் பதிலாக காசோலையையே கொடுத்து வந்துள்ளார்.
நெடுநாளாகியும் காசோலைக்குரிய பணம் வங்கியில் வைப்புச் செய்யப்படவில்லை. இதனால் கடை உரிமையாளர் காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இவரையே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ங-4)

# திருடர்கள் அட்டகாசம் அச்சத்துடன் வாழும் மக்கள்

வலி.வடக்கு, ஒக. 12
ஏழாலை கண்ணகி அம்மன் கோயிலடியில் திருடர்களின் செயற்பாட்டால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அச்சத்துடன் இரவில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னார் ஆலயக் கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டரை திருடிச் சென்ற திருடர்கள் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நள்ளிரவு மீண்டும் ஆலய சுற்றாடலில் நடமாடியுள்ளனர்.
இதனை அவதானித்த கோயில் மடத்தில் இருந்த இளைஞர் சத்தமிட்டத்தைத் தொடர்ந்து திருடர்கள் தப்பி ஓடியுள்ளனர். சுன்னாகம் பொலிஸாருக்கு இது குறித்து உடன் தகவல் தெரிவிக்கப்பட்டு பொலிஸார் தேடுதலில் ஈடுபட்ட போதிலும் சந்தேக நபர்கள் எவரும் அகப்படவில்லை. (வ-86)

# தமிழகத்தை அவமதிக்கிறது இந்தியா



யாழ்ப்பாணம், ஒக. 12
பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு ஆதரவாக இந்தியா நடந்துகொள்கிறது. இது தமிழகத்தின் அடையாளத்தை அழிக்கும் - அவமதிக்கும் ஒரு செயல் என்று சீறியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இதுவரை தமிழகத்தைச் சேர்ந்த 578 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆயினும் தற்போது கூட தமிழக மீனவர்களது பிரச்சினை தொடர்பாக இலங்கையரசுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் வெறும் கடிதங்கள் மூலம் மட்டுமே அறிக்கை அனுப்பிக் கொண்டிருக்கிறது - என்றார். (ங-14)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# கிராண்ட்பாஸில் பதற்றநிலை நேற்றும் ஊரடங்குச்சட்டம்

பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது' என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக்க சிறிவர்த்தன தெரிவித்தார்.
இதேவேளை, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியோரைச் சட்டத்தின்முன் தவறாது நிறுத்தவேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் இலங்கையிலுள்ள தூதரகம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,
''இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக சமீபகாலமாக அநேக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எந்தவொரு வழிபாட்டுத் தலம் மீதும் தாக்குதல் நடத்த அனுமதிக் கப்படமுடியாது'' என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ங-சி)

# சொந்தக் காணிகளுக்குச் சென்ற தமிழ் விவசாயிகள் விரட்டியடிப்பு

பயிர்ச்செய்கைமேற்கொள்ள தமக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் அந்தக் காணிகளை விட்டு வெளியேறுமாறு தெரிவித்தனர். அதன் பின்னர் மகாவலித் திட்ட அதிகாரிகளிடமும் பெரும்பான்மை இனத்தினர் முறையிட்டனர்.
இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த மகாவலித்திட்ட அலுவர்கள் குறிப்பிட்ட நிலப் பகுதிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு விட்டதால் நீங்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனக்கூறி தமிழ் விவசாயிகளை விரட்டியத்துள்ளனர். அத்துடன் கோட்டைக் கேணி என்ற இடத்துக்கு அப்பால் தமிழர்கள் வர அனுமதி இல்லை என்றும், அப்படி வந்தால் பொலிஸாரை வரவழைத்து நடவடிக்கை எடுப்போம் என்றும் மகாவலி திட்ட அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இதனால் சொந்த நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாமல் ஏமாற்றத்தோடு தாம் திரும்பியதாக அந்தப் பகுதி மக்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தனர். (ங-400)

# நாவற்குழி விகாரையில் வெடிக்காத கைக்குண்டு

விகாரை முன்பாகவுள்ள மண்டபத்தில் சில இடங்களில் சிறிதீ வெடிப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைப் பார்வையிட்டுச் சென்றனர். பின்னர் நேற்றுக் காலையும் அங்கு பொலிஸார் சென்ற போதே வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டை மீட்டுள்ளனர். எனினும் இதுதொடர்பில் எவரையும் தாம் இதுவரை கைது செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை சம்பவம் நடைபெற்ற பகுதி இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-4)

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்

அமைச்சர்கள் நேற்று கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-
பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக உடனடியாக சுயாதீனமான விசாரணையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நாட்டின் தலைவரான ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம். இந்தத் தேசவிரோத செயலில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் - நீதியின் முன் நிறுத்துமாறு சட்டத்தையும், ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறோம்.
கடந்த சில தினங்களாக மசூதிகள் மீது தாக்குதல்கள் நடந்துள்ளன. எனினும், இவற்றிற்கு எதிராக சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.
கடைசிச் சம்பவம் கொழும்பு மத்தி மற்றும் கொழும்பு வடக்கு பகுதிகளான கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, மருதானை, கெத்தாராம ஆகியவற்றில் பதற்றத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.
முஸ்லிம் அமைச்சர்களான நாம் ஜனாதிபதியிடமும் பௌத்த மதத் தலைவர்களிடமும் விடுக்கும் கோரிக்கை, அதிகரித்து வரும் இத்தகைய தாக்குதல்களை தடுத்து நிறுத்துங்கள் என்பதுதான் - என்றுள்ளது.
இந்தக் கூட்டறிக்கையில் அமைச்சர்கள் எம்.எச்.எம்.பௌஸி, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ஏ.எல்.எம்.அதாவுல்லா, பஷீர் சேகுதாவூத், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பைசல் முஸ்தபா, ஏ.ஆர்.எம்.அப்துல் காதர் மற்றும் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (ங-சி-10)

**தவறிவிட்டது**

பொ.சிவப்பாதசிங்கம் 550261987V, க.கௌசிகா 927392496V ஆகிய எமது தேசிய அடையாள அட்டைகள் கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு- 0773090839

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



R.S.நடராசா
(Senior Research Assistant RDA)
தோற்றம் 17.10.1954 மறைவு 15.08.2010

உன் உதிரம் சிந்தி
ஊட்டி வளர்த்தாய் எங்களை
ஏற்றிவிட்டாய் ஏணியாய்
ஏழேழு ஜென்மத்திலும் வேண்டும் - நீ
தந்தையாய் எங்களுக்கு

201, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**காணி விற்பனைக்கு உண்டு**

6ஆம் கட்டை பூதர்மடம் நீர்வேலி தெற்கில் பருத்தித்துறை வீதியில் 10 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0718474193, 0750391714

**வீடு வாடகைக்கு தேவை**

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட A9 வீதிக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 774 8086 (31324) (7.6.3)



எயாரெல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிராமப் புறத்தில் உள்ள 20 வயதுக்கு உட்பட்ட உதைபந்தாட்ட வீரர்களை வெளிக் கொண்டுவரும் வகையில் ஒருநாள் பயிற்சி முகாம் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அந்த பயிற்சி முகாமில் வலிகாமம் யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக்குகளில் உள்ள கழகங்களின் வீரர்கள், பாட சாலை வீரர்கள் என நூற்றுக்கும் மேற் பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

பயிற்சி முகாமில் திறமைகளை வெளிப்படுத்தியவர்கள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் கட்டமாக அகில இலங்கை ரீதியில் இடம் பெறும் ப்யிற்சி முகாமில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். (ற-86)

வளர்மதி சனசமூக நிலைய தாச்சி சுற்றுத் தொடர்

# ஆலடி சிந்து சம்பியன்

**பாரம்பரிய விளையாட்டை வளர்த்தெடுக்கும் நோக்கோடு நடத்தப்பட்டபட்ட இந் தத் தொடரில் எட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந் தன. அதில் சம்பியனாக ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் தெரி வாகியது.**

கைதடி, ஓக. 12

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வளர்மதி சன சமூக நிலையம் நடத்திய தாச்சிச் சுற்றுத் தொடரில் சம்பியனாக ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் தெரிவாகியது.

சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகமும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாகவே இருந்தது. இரு கழகங்களும் நீயா நானா என்ற தோரணையில் களத்தில் ஆடிக்கொண்டிருந்தன. இடைவேளை வரை ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம் ஒரு புள்ளிய்யை மட்டும் பெற மயிலிட்டி கண்ணகி எதுவித புள்ளியையும் பெறவில்லை.

இடைவேளையின் பின் மயிலிட்டி கண்ணகி ஒரு புள்ளியைப் பெற போட்டி இன்னும் சூடுபிடித்தது. ஆனாலும் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் சளைக்காது மூன்றுபுள்ளிகளைத்தொடர்ந்து பெற்று முன்னிலை பெற்றது.

அதன் பின்னர் மயிலிட்டி கண்ணகி அணியினரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஆலடிசிந்து விளையாட்டுக்கழகம் 4:1 என்ற புள்ளி அடிப்படையில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நடைபெற்ற போட்டிகளுக்கு நடுவர்களாக எஸ்.சண்முகலிங்கம், கே.ஆனந்தகேஸ்வரன், எஸ்.ஜினதாஸ், கே.தயாளன் ஆகியோர் கடமை புரிந்தனர்.

பாரம்பரிய விளையாட்டை வளர்த்தெடுக்கும் நோக்கோடு நடத்தப்பட்டபட்ட இந்தத் தொடரில் எட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன. (ற-288)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் ஓக.12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4மணி
கலைமதி (பி) விளையாட்டுக் கழகம் எதிர் உதய தாரகை விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.45 மணி
சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் எதிர் கலட்டி விளையாட்டுக் கழகம். (ற-23)



மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணித் தலைவரிடம் பிரதம விருத்தினர் வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார். (ற-23)

கம்பர்மலை யங்கம்பன்ஸ்

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இதுவரை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் வீனஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரனாக வீனஸ் அணியைச் சேர்ந்த லசிகன் தெரிவானார்.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணிமோதிக்கொண்டது.

அதில் மனோகரா விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரனாக மனோகரா விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த கோகுலன் தெரிவானர்.

நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணிமோதியது.

அதில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரனாக நியூட்டன் அணியைச் சேர்ந்த தர்மிகன் தெரிவானர்.

இரண்டவது இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றதை அடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சிறந்த வீரனாக இமையாணன் அணியைச் சேர்ந்த லக்சன் தெரிவானார்.(ற-23)




உலகத் தடகளப் போட்டிகள்

# முதல் பதக்கம் வென்றது கென்யா

ரஷ்யாவில் நடந்து வரும் உலக தடகளப் போட்டியில் கென்யா முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது. பெண்கள் மரதனில் அந்த நாட்டின் எட்னா கிப்லாகாட் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

ரஷ்ய தலைநகர் மஸ்கோவில் நேற்றுமுன்தினம் தொடங்கிய 14ஆவது உலக தடகள சம்பியன்ஸிப் போட்டிகளில் முதல் நாளில் பெண்களுக்கான மரதன் பந்தயத்தில் 33 நாடுகளை சேர்ந்த 75 வீரர்கள் கலந்து கொண்டனர். 42.195 கிலோ மீற்றர் தூரத்தை கென்ய வீராங்கனை எட்னா கிப்லாகாட் 2 மணி 25 நிமிடம் 44 வினாடியில் வெற்றிகரமாக கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

ஏற்கனவே 2011ஆம் ஆண்டு மரத்தனிலும் இவர் தான் தங்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் உலக மரதனில் தொடர்ந்து இரண்டு முறை தங்கப்பதக்கம் கைப்பற்றிய முதல் வீராங்கனை என்ற புதிய சாதனைக்கு 33 வயதான கிப்லாகாட் சொந்தக்காரர் ஆனார்.

அவரை விட 14 வினாடிகள் மட்டுமே பின்தங்கிய இத்தாலி வீராங்கனை வலேரியா ஸ்டிரானியோவுக்கு வெள்ளிப்பதக்கமும், ஜப்பான் வீராங்கனை கயோகோ புகுஷிக்கு வெண்கலமும் (நேரம்: 2:27:45) கிடைத்தது.

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் சம்பியன் இங்கிலாந்தின் 30 வயதான மோ பாரா 27 நிமிடம் 21.71 வினாடியில் ஓடி முதலிடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தை வென் றார். நடப்பு சம்பியன் எத்தியோப்பியாவின் இப்ராகிம் ஜ°லியன் (27 நிமிடம் 22.23 வினாடி) 2 ஆவது இடத்தை பிடித்தார்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலக போட்டியில் இதே இப்ராகிமிடம் தான் மோ பாரா தங்கப்பதக் கத்தை கோட்டை விட்டார். அதற்கு இந்த முறை பழி தீர்த்துக் கொண்டார்.(ற)

## சிறந்த மனிதனாக உருவாக்கியது கிரிக்கெட்

### ராகுல் டிராவிட்

கிரிக்கெட் என்னை ஒரு சிறந்த மனிதராக உருவாக்கியுள்ளது என இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோவாவில் உள்ள பிர்லா கல்வி நிறுவனத்தில் நடந்த பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று ஒன்றரை வருடங்களுக்கு பிறகு, கிரிக்கெட் என்னை ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கியிருக்கிறது என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

நான் கிரிக்கெட் விளையாடியபோது பல வெற்றிகளையும், தோல்விகளையும் சந்தித்தேன். இது வாழ்க்கையை பற்றி நிறைய கற்றுக் கொடுத்தது.

தற்போது, நான் எனது தந்தையின் கலையகத்தில் அமர்ந்து கொண்டு ஒரு குழந்தையை போல் கிரிக்கெட் அறிவிப்புகளை கவனித்து வருகிறேன்.

வாழ்க்கையில் வெற்றிபெற பல லட்சக்கணக்கான வழிகள் இருக்கின்றன. உலகத்தில் முதல் நபராக நீங்கள் இருக்க வேண்டியதில்லை. ஆனால் உங்கள் குறிக்கோளை அடைய, நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.(ற)




## ஆஸ்திரேலியா ஆதிக்கம்

இங்கிலாந்தில் இடம்பெற்று வரும் ஆஷஷ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் 2 ஆம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி தொடர்ந்தும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. 5 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் அவ்வணி 16 ஓட்டங்களால் மாத்திரம் பின்னிலை வகிக்கிறது.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 2ஆம் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்றி இடைநிறுத்தப்படும் போது 5 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதலிரண்டு இலக்குகளையும் 12 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களுடன் தடுமாறியது. ஆனால் கிறிஸ் றொஜர்ஸ், ஷேன் வொட்சன் இருவரும் 5ஆவது இலக்குக்காக 129 ஓட்டங்களைப் பகிர்ந்து ஆஸ்திரேலிய அணிக்கு முன்னிலையை வழங்கினர்.

துடுப்பாட்டத்தில் தனது கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்த கிறிஸ் றொஜர்ஸ் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் காணப்படுகிறார். தவிர ஷேன் வொற்சன் 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 4 இலக்குகளையும், ரிம் பிரெஸ்னன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முன்னதாக, 9 இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களுடன் 2ஆவது நாளை ஆரம்பித்த இங்கிலாந்து அணி மேலதிக ஓட்டங்களைப் பெறாமலேயே இறுதி இலக்கை இழந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ் ரெயர்குக் 51 ஓட்டங்களையும், ஜோ றூட் 49 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக நேதன் லையன் 42 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், றயன் ஹறிஸ், ஜக்ஸன் பேர்ட் இருவரும் 2 இலக்குகளையும், ஷேன் வொற்சன், பீற்றர் சிடில் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.(ற)

## தலைமை பதவிக்கு வரமாட்டேன்

### – சுக்லா

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஐபிஎல் போட்டிகளுக்கு தலைவராக இருக்க மாட்டேன் என ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஐ.பி.எல். தொடரில் சூதாட்ட பிரச்சினை சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதனை தொடர்ந்து ஐ.பி.எல். தலைவர் பதவியில் இருந்து விலகினார் சுக்லா. அவருடைய பதவி விலகல் கடிதம் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், அடுத்த ஆண்டு நிச்சயம் தலைவர் பதவி வகிக்க மாட்டேன் என சுக்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ''எனது கடிதம் இன்னும் ஏற்கப்படாததால் தான் சம்பியன்ஸ் கிண்ண '20/20' கிரிக்கெட் தொடர் தொடர்பான கூட்டங்களுக்கு தலைமையேற்று வருகிறேன்.

ஆனால் அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தலைவராக இருக்க மாட்டேன் என்பதில் உறுதியாக இருக்கிறேன். அந்த பதவிக்கு மீண்டும் வரும் எண்ணமில்லை'' என்று தெரிவித்துள்ளார்.(ற)



## சதமடிக்காமல் மிஸ்பா சாதனை

இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் சதத்தில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார். ஆனால் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா, சதம் அடிக்காமல் புதிய சாதனை நிகழ்த்தியுள்ளார்.

2001ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் அறிமுகமான மிஸ்பா, 2002 ஆம் ஆண்டு முதன் முதலில் ஒருநாள் ஆட்டத்தில் களமிறங்கினார்.

இதுவரை 39 டெஸ்ட், 125 ஒருநாள், 39 சர்வதேச '20/20' ஆட்டங்களில் விளையாடி உள்ளார். மத்தியதர வீரராக களமிறங்கும் இவர் டெஸ்டில் மூன்று சதம் அடித்துள்ளார். ஆனால் ஒருநாள் போட்டியில் ஒரு சதம் கூட அடிக்கவில்லை. ஒருநாள் போட்டியில் இவரது அதிகபட்சமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக பெற்ற 96 ஓட்டங்களாகும்.

மிஸ்பா, இதுவரை விளையாடிய 125 ஒருநாள் போட்டியில் 29 அரைசதம் உட்பட 3819 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதன்மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில், ஒரு சதம் கூட அடிக்காமல் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார்.

இவரை அடுத்து பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் (356 போட்டி, 3717 ஓட்டங்கள், 6 அரைசதம்), மொயின் கான் (219 போட்டி, 3266 ஓட்டங்கள், 12 அரைசதம்), சிம்பாப்வேயின் சிகும்புரா (150 போட்டி, 2996 ஓட்டங்கள், 15 அரைசதம்) ஆகியோர் உள்ளனர். இந்தியா சார்பில் ஒருநாள் போட்டியில் ஒரு சதம் கூட அடிக்காமல் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் இர்பான் பதான் (120 போட்டி, 5 அரைசதம், 1544 ஓட்டங்கள்) உள்ளார். (ற)




## பரபரப்பான ஆட்டத்தில் வென்றது ரெபோக்கோ

கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் 10ஆவது ஆட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி வெற்றி பெற்றுள்ளது. கயானா அணிக்கெதிரான ஆட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ட்ரினி டாட் அன்ட் ரொபாக்கோ அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 11.4 பந்துப்பரிமாற்றங்களில் அதிரடியாக 95 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் வேகமாகத் துடுப்பெடுத்தாடத் தவறியது.



துடுப்பாட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக கெவின் ஓ பிரையன் 47 பந்துகளில் 70 ஓட்டங்களையும், றொஸ் ரெய்லர் 27 பந்துகளில் 39 ஓட்டங்களையும், அட்ரியன் பரத் 31 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கயானா அணி சார்பாக கிரிஷ்மர் சாந்தோகி 2 இலக்குகளையும், கிறிஸ்தோபர் பார்ன்வெல், ஸ்டீவன் ஜேக்கப்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கயானா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்தில் மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவ்வணி, இறுதி 12 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. அதன் பின்னர் இறுதி பந்துப் பரிமாற்றத்தில் 20 ஓட்டங்கள் தேவைப்பட, முதல் 2 பந்துகளைத் தவறவிட்ட பார்னெல், மூன்றாவது பந்தில் உதிரியாக ஓர் ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் இறுதி 3 பந்துகளில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 4ஆவது பந்தில் நான்கு ஓட்டங்களும், அடுத்த பந்து அகலப் பந்தாக மாற, இறுதி 2 பந்துகளில் 14 ஓட்டங்களும் தேவைப்பட்டன. 5ஆவது பந்தில் ஆறு ஓட்டங்களும், 6ஆவது பந்தில் நான்கு ஓட்டங்களும் குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் கயானா அணி சார்பாக ஜேம்ஸ் பிராங்ளின் 34 பந்துகளில் 60 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 38 பந்துகளில் 35 ஓட்டங்களையும், கிறிஸ்தோபர் பார்ன்வெல் 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக டுவைன் பிராவோ 2 இலக்குகளையும், பிடல் எட்வேர்ட்ஸ், டெலோர்ண் ஜோன்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக கெவின் ஓ பிரையன் தெரிவானார்.(ற)

# ரொனால்டோவின் அதிரடியில் சம்பியனானது ரியல் மாட்ரிட்




செல்சி அணிக்கெதிரான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற ரியல் மாட்ரிட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

அமெரிக்காவில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண உதைபந்துத் தொடரின் இறுதிச்சுற்றில் ரியல் மாட்ரிட், செல்சி அணிகள் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு மார்சிலோ 14ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். இதற்கு செல்சி அணியின் ராமிரஸ் (16) பதிலடி கொடுத்தார்.

நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 31வது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க ரியல் மாட்ரிட் அணி முதல் பாதியில் 2:1 முன்னிலை பெற்றது.

தொடர்ந்து அசத்திய ரொனால்டோ 57வது நிமிடம் மற்றொரு கோல் அடித்தார். ஆட்டநேரமுடிவில் ரியல் மாட்ரிட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றது. (ற)

## உத்துரவை வீழ்த்தியது பஸ்னாகிர

இலங்கையின் உள்ளூர் '20/20' முதலாவது ஆட்டத்தில் பஸ்னாகிர அணி வெற்றிபெற்றது. உத்துர அணிக்கெதிரான ஆட்டத் தில் பஸ்னாகிர அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உத்துர அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களுடன் காணப்பட்டது

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

மெதுவான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட பஸ்னாகிர அணி, இலக்குகளையும் இழந்து வந்தது. 12 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களுடன் காணப்பட்ட அவ்வணி, அதன் பின்னர் ஓட்டங்களை ஓரளவு குறித்து போட்டித் தன்மையான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பஸ்னாகிர அணி சார்பாக சானக குணரத்ன 31 பந்துகளில் 40 ஓட்டங்களையும், கித் துருவன் வித்தானகே 14 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 35 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உத்துர அணி சார்பாக அகில தனஞ்சய 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சொஹான் பொரலஸ்ஸ 33 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷமிண்ட எரங்க 18 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய உத்துர அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் உத்துர அணி சார்பாக அஷன் பிரியஞ்சன் 27 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எந்த வீரரும் 20 இற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் பஸ்னாகிர அணி சார்பாக சுரங்க லக்மால் 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், இசுரு உதான 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சச்சித்திர சேனநாயக்க, அஞ்சலோ மத்தியூஸ், கோசல குலசேகர ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற)

## கந்துரட்டவின் அதிரடியில் அடங்கியது றுகுண

இலங்கையின் உள்ளூர் '20/20' தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் கந்துரட்ட அணி வெற்றி பெற்றுள்ளது. றுகுண அணிக்கெதிரான ஆட்டத்தில் கந்துரட்ட அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கந்துரட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கந்துரட்ட அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ச்சியாக இடைவெளிகளில் இலக்குகளை இழந்த கந்துரட்ட அணி சார்பாக உபுல் தரங்க, குமார் சங்கக்கார இருவரும் ஆரம்பத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதோடு, இறுதி நேரத்தில் லஹிரு திரிமன்ன சிறப்பாக ஆடினார்.

துடுப்பாட்டத்தில் கந்துரட்ட அணி சார்பாக குமார் சங்கக்கார 39 பந்துகளில் 49 ஓட்டங்களையும், உபுல்தரங்க 30 பந்துகளில் 36 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன 14 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றுகுண அணி சார்பாக டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், சீக்குகே பிரசன்ன ஆகியோர் 2 இலக்குகளையும், லசித் மலிங்க ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றுகுண, 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 146 ஓட்டங் களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்திலிருந்து இலக்குகளை இழந்த அவ்வணி, 5.5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. பின்வரிசை வீரர்கள் அதிரடியாக ஆடிய போதிலும் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாது போனது.

துடுப்பாட்டத்தில் றுகுண அணி சார்பாக யசோதா லங்கா 36 பந்துகளில் 36 ஓட்டங்களையும், அஞ்சலோ பெரேரா 21 பந்துகளில் 25 ஓட்டங்களையும், டில்ருவான் பெரேரா 12 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கந்துரட்ட அணி சார்பாக தம்மிக்க பிரசாத் 3 இலக்குகளையும், நுவான் குலசேகர 2 இலக்குகளையும், டில்ஹார லொக்குஹெட்டிகே, ஷெஹான் ஜெயசூரிய, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள், மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).

France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.

இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்

புதிய வகுப்பு: 17.08.2013 11a.m - 1 pm (சனி, ஞாயிறு)

61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093

(30321) கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

**HONDA விசேட விலை**

HONDA

இன்னும் சலுகைகள் ஏராளம்

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள எமது HONDA உற்சவகால காட்சி அறையில் வழங்கப் படும் HONDA துண்டுப் பிரசுரத்தை கையளித்து விசேட விலைக் கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

HONDA WORLD
பிரதான வீதி, நெல்லியடி

0212264416
hot: 077038444

**கைத்தொலைபேசி திருத்துநர் தேவை**

இலங்கையில் பிரபலமான கையடக்கத் தொலைபேசி நிறுவனம் ஒன்றிற்கு யாழ் மாவட்டத்தில் கைத்தொலைபேசி திருத்துநராகப் பணியாற்ற முன் அனுபவம் உடைய தமிழ்/ சிங்களம் சரளமாக பேசக்கூடியோரிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றனர். 35 வயதிற்கு உட்பட்டோர்.

விண்ணப்பங்களை 16.08.2013 இற்கு முன்னதாக பின்வரும் முகவரியில் நேரில் ஒப்படைக்கவும்.

ராம் சுப்பர் சிற்றி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1262

(C/11131)
(7.8.3)



**Kumaran Silks இன்**



ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நல்லூர் கந்தன் ஆலய உற்சவ காலத்தில்

Discount 15% To 25% கழிவு வழங்கப்படும்.

Wedding Sarees-
திருமணப்பட்டுப் புடவைகள்
Bridal Sarees
Casual Sarees
Designer Sarees
Cotton Sarees
Salwar material (cotton & Silks)
Blouse
T.shirts Tops and etc

Cotton - 500/=

Silks - 700/=



No.788, Point pedro Rd
Nallur, Jaffna, Srilanka.

T.P 0212054075
E.mail- Kumarantlc@mail.com

இல.788, பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்
(முத்திரைச்சந்தி அருகாமை)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2013 இல் அச்சிட்டு வெளியிட்டப்பெற்றது.